NEW MASTER INSTITUTE
B. M. C. Lane,
JAFFNA.
91 AL
Week End Classes
பிரிவு I I
ஆரம்பமாகி விட்டது
7.30 - BOTANY
8.30 - ZOOLOGY
9.30 - CHEMISTRY
10.30 - PHYSICS
7.30 - PURE&APPLIED

பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை
ரூ 2/50

NEW MASTER INSTITUTE
B. M. C. Lane,
JAFFNA.
AL 91
(Week end Classes)
பிரிவு I க்கான
வகுப்புகள்
நடைபெறுகின்றன.
7.30 - ZOOLOGY
8.30 - BOTANY
10.30 - HEMISTRY
11.30 - PHYSICS
7.30 - PURE&APPLIED

சுடர்: 4 சுக்கில ஆண்டு ஸ்ரீ ஆவணி 07 உ புதன்கிழமை ஹிஜ்ரி 1410 முஹறம் பிறை 20 (23 - 08 - 1989) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்: 224

# புதுடில்லி யோசனைகளில் மேலும் மாறுதல் தேவை!

## ஜனாதிபதி பிரேமா வலியுறுத்து

புதுடில்லி ஆகஸ்ட் 23

அமைதிப்படை விலகல் விவகாரம் தொடர்பான புதுடில்லி யோசனைகள் குறித்து இலங்கை - இந்தியா ஆகிய இரு நாடுகளும் கூட்டறிக்கை வெளியிடுவதற்கு முன்னர் அந்த யோசனைகளில் மேலும் மாறுதல்கள் செய்யப்பட வேண்டும். - இவ்வாறு இலங்கை ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாஸா தொடர்ந்து வலியுறுத்தி வருவதாக புதுடில்லி செய்திகள் தெரிவித்தன.

அமைதிப்படை விலகல், இலங்கையில் அதிகாரப் பரவலாக்கல் ஆகிய விடயங்கள் தொடர்பாக புதுடில்லியில் இலங்கை இந்திய அரசுகளின் அமைச்சர் மட்டக்குழுக்களிடையே நடந்த பேச்சுக்களின்போது சில யோசனைகள் உருவாக்கப்பட்டமை தெரிந்ததே. இந்த யோசனைகள் மீளாய்வு செய்யப்பட வேண்டும் என்று தெரிவித்து மேலும் பேச்சுக்களை நடத்த ஜனாதிபதி பிரேமதாஸா தனது வெளியுறவு ஆலோசகரான திரு. பிரட்மன் வீரக்கோனை திடீர் என்று புதுடில்லிக்கு அனுப்பியிருந்தார் என்பதும் தெரிந்ததே.

கொழும்பு திரும்பிய திரு. பிரட்மன் வீரக்கோன் புதுடில்லி யோசனைகளை மீளாய்வு செய்வது பற்றி ஜனாதிபதி தெரிவித்திருந்த கருத்துக்களுக்கு இந்திய அரசு தெரிவித்த விளக்கங்களை திரு. பிரேமதாஸாவிற்கு விவரித்தார்.

இதைத் தொடர்ந்து அமைதிப்படை விலகல்; வன்செயல்கள் நிறுத்தம், இதுதொடர்பான மற்றும் பிரச்சினைகளுக்குத்தீர்வு காணும் ஒரு பொது நிலைப்பாடு இரு அரசுகளுக்கும் இடையே ஏற்பட்டுவிட்ட

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ஆஸ்பத்திரி ஊழியர் வேலை நிறுத்தம் தொடரும்

### சட்டன் பெரமுன அறிவிப்பு

கொழும்பு, ஆக 23

ஆஸ்பத்திரி ஊழியர் வேலை நிறுத்தம் தொடரும் என்று சுகாதார சேவைகள் நடவடிக்கை முன்னணி (சட்டன் பெரமுன) திங்கள் பிற்பகல் அறிவித்தது.

முன்னணி இது சம்பந்தமாக விடுத்த அறிக்கை ஒன்றில் -

பதுளை தாதி பயிற்சிக் கல்லூரியைச் சேர்ந்த மஹிந்த சேனரத்தின, கிரந்துருகோட்டை ஆஸ்பத்திரி ஊழியர் டி. எச். எக்கநாயக்கா மற்றும் கண்டி ஆஸ்பத்திரியைச் சேர்ந்த நிச்சாட் ஆகியோர் வனுத்த முல்லையில் வைத்து சென்ற 20 ஆம் திகதி கைதுசெய்யப்பட்டனர்.

இவர்கள் விடுதலை செய்யப்படும்வரை ஆஸ்பத்திரி ஊழியர் வேலைக்குத் திரும்ப மாட்டார்கள்.

கொலைப்பட்ட கல்பிட்டி ஆஸ்பத்திரி டாக்டர் நீல் ஹேமந்தா, மாத்தறை ஆஸ்பத்திரி டாக்டர் ராஜரத்தின மற்றும் ராணு ஆஸ்பத்திரி வைத்திய அதிகாரி ஆகியோரின் மரணம் குறித்து பூரண

(6 ஆம் பக்கம் பார்க்க)

## முச்சந்தி முரளி



தெற்குச் சாவுப் பட்டியல் மிக நீண்டுகொண்டே போகுது போலை.........!

## தென்பகுதியில் நேற்று மட்டும் 53 பேர் மரணம்

கொழும்பு, ஆக. 23

தென் பகுதியில் இடம்பெற்ற வன்செயல்களில் நேற்றுமட்டும் மொத்தமாக 53 பேர் உயிரிழந்தவர் என்று கடைசியாகக் கிடைத்த செய்திகள் தெரிவித்தன. (எ)

## பிரேமாவின் சங்கடம்!

அமைதிப்படை திரும்பியவுடன் வடக்கு-கிழக்கு மாகாணத்தின் பாதுகாப்பைப் பொறுப்பேற்கும் அமைப்பு எது என்பதை தீர்மானிப்பதில்தான் ஜனாதிபதி பிரேமதாஸா சங்கடப்படுவதாக புதுடில்லியில் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

வடக்கு-கிழக்கு மாகாண அரசின் கீழான மக்கள் தொண்டர் படை பாதுகாப்புப் பொறுப்பை ஏற்பதை இலங்கை அரசு விரும்பவில்லை.

மக்கள் தொண்டர்படைக்கு மாற்றாக சரியான அமைப்பு எதனையும் இலங்கையால் காட்டமுடியுமா என்பதையும்; அப்படி இலங்கையால் சமர்ப்பிக்கக் கூடிய மாற்று ஏற்பாடு என்ன என்பதையும் அறிந்து கொள்வதில் இந்தியா அக்கறை காட்டுகிறது.

இலங்கையின் மாற்று ஏற்பாடு, வடக்கு-கிழக்கு மாகாணத்தில் உள்ள சகல இன மக்களின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்துவதாக இருக்க வேண்டும் என்று புதுடில்லி வலியுறுத்தியுள்ளது. (உ-எ)

## சுப்பர்மடம் மயானத்தில் நேற்று பதினொரு பேரின் சடலங்கள் எரிப்பு

யாழ்ப்பாணம், ஆக. 23

அல்வாய், வியாபாரிமூலை பகுதிகளில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சம்பவங்களில் உயிரிழந்தவர்களின் பதினொரு பேரின் சடலங்கள் அன்று மாலை ஐந்து மணியளவில் புலோலி மேற்கு சுப்பர் மடம் மயானத்தில் ஒரே நேரத்தில் எரிக்கப்பட்டன.

கூவக்கரை வத்தனைப் பகுயைச் சேர்ந்த ஒரே குடும்பத்தவர்களான நால்வரின் சடலங்களும்—

அல்வாய் வடக்கு நாவலடிச் சந்தியில் வசிக்கும் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த மூவரின் சடலங்களும்—

வேறு நால்வரின் சடலங்களுமாக பதினொரு பேரின் சடலங்களே ஒன்றாக எரிக்கப்பட்டன.

உயிரிழந்தோரில் பலர் அல்வாய் முத்துமாரி அம்மன் ஆலய வீதி ஓரத்தில் வைத்துச் சுடப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

இச் சம்பவங்களையடுத்து கூவக்கரைப்பகுதியிலுள்ள பல ஓலை வீடுகள் தீக்கிரையாகின: அவ் வீடுகளில் கட்டிவைக்கப்பட்டிருந்த வெங்காயக் கட்டுகள் எரிந்து சாம்பராயின.

மோட்டார் சைக்கிள்களும் பல சைக்கிள்களும் ஒன்றாகப்

(6 ஆம் பக்கம் பார்க்க)

### மேலும் 2 பேர் உயிரிழப்பு

வல்வெட்டித்துறை, ஆக 23

அல்வாய் தம்பகிட்டிப் பகுதியில் திங்களன்று இடம்பெற்ற அசம்பாவிதங்களில் உயிரிழந்த பத்துப் பொது மக்களின் பெயர்கள் நேற்றைய உதயனில் வெளியாகியிருந்தது. மேலும் இருவரின் பெயர் விபரங்கள் தற்போது கிடைத்துள்ளன: விவரம் வருமாறு!

★ கந்தசாமி தர்மாசலம் (வயது 21) பொலிகண்டியைச் சேர்ந்தவர்: ஐஸ்பழ வியாபாரி.

★ எம். சுரேஷ் (வயது 25) தொண்டமானாறைச் சேர்ந்தவர்: தனியார் மினிபஸ் நடத்துனர். (உ-160)

## வடமராட்சியில் பதற்றம்; மக்கள் இடம்பெயர்கிறார்கள்

வல்வெட்டித்துறை, ஆக. 23

வடமராட்சிப் பகுதியில் தொடர்ந்தும் இடம்பெற்று வரும் அசம்பாவிதங்கள் காரணமாக மக்கள் அப்பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து வருகின்றனர்.

இப்பகுதியில் சனநடமாட்டமும் வெகுவாகக் குறைந்திருக்கிறது. போக்குவரத்துச் சேவைகளும் சீராக நடைபெறவில்லை.

குறிப்பிட்ட சில பகுதிகளில் மக்கள் மத்தியில் இனம் புரியாத பீதியும், பயமும் காணப்படுகின்றன. அங்கெல்லாம் கடைகள் மூடப்பட்டிருந்தன.

எங்கும் பதற்ற நிலை காணப்படுவதாக அங்கிருந்து வந்தவர்கள் தெரிவிக்கின்றனர். (உ-ஓ-160)

## இந்தியாவின் சிறப்புத் தூதுவராக வெளியுறவுச் செயலர் எஸ்.கே.சிங்?

புதுடில்லி, ஆக. 23

இந்திய வெளியுறவுச் செயலாளர் எஸ். கே. சிங்கையே சிறப்புத் தூதராக கொழும்புக்கு அனுப்ப புதுடில்லி அரசு முடிவு செய்திருப்பதாக ராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன.

இதுபற்றி விசாரித்தபோது புதுடில்லி வெளியுறவு அமைச்சு அதிகாரி ஒருவர் சொன்னதாவது:-

இக்கட்டத்தில் திரு. சிங் இந்த விஜயத்தை மேற்கொள்வாரா என்பதுபற்றி எனக்குத் தெரியாது.

இலங்கையின் விசேட தூதர்களாக அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தின, திரு பிரட்மன் வீரக்கோன் ஆகியோர் புதுடில்லி வந்து சென்றனர்:

பேச்சுக்கள் தொடருவதற்கு தேவைப்பட்டால் இந்தியாவும் ஒரு தூதரை கொழும்புக்குப் பின்னர் அனுப்பி வைக்கும்.

—இப்படி அந்த அதிகாரி சொன்னார்.

இதே வேளை - கொழும்பில் உள்ள இந்தியத் தூதர் திரு. மெஹ்ரோத்திரா கருத்து வெளியிடுகையில் —

"இந்திய அரசு சிறப்புத் தூதர் கொழும்புக்கு வருவதற்கான திகதி நிர்ணயிக்கப் படவில்லை" — என்று தெரிவித்தார். (உ-எ)

## நாளை நாடாளுமன்றம்

கொழும்பு, ஆகஸ்ட் 23

நாடாளுமன்றம் நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு மீண்டும் கூடுகிறது.

அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாத காலத்துக்கு நீடிக்கும் பிரேரணையை நாடாளுமன்றம் விவாதிக்கும். (உ-எ)

## மாணவர் தலைவர் சுட்டுக்கொலை!

கொழும்பு, ஆகஸ்ட் 23

தென்பகுதி பல்கலைக்கழகங்களின் மாணவர் பிரதிநிதிகள் அங்கம் வகிக்கும் சுதந்திர மாணவர் சங்கத்தின் தலைவர் திரு. கே. எல். தர்மசிறி கடந்த 19 ஆம் திகதி இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இத்தகவலை அரசு அறிக்கை ஒன்று நேற்று வெளியிட்டது.

மரணமான திரு. தர்மசிறி கொழும்பு பல்கலைக்கழகச் சட்டத்துறை இறுதி ஆண்டு மாணவர் என்று அறிவிக்கப்பட்டது. (உ-எ)

## பிரேமாவின் சிறப்புச் செய்தி பெனஸிரிடம்!

இஸ்லாமாபாத், ஆக 23

வர்த்தக கப்பற்றுறை அமைச்சர் ஏ. ஆர். மன்சூர் நேற்று இஸ்லாமாபாத்தில் பாகிஸ்தான் ஜனாதிபதி குலாம் இஷாகான், பிரதமர் பெனஸிர் பூட்டோ ஆகியோரைச் சந்தித்துப் பேசினார்.

ஜனாதிபதி பிரேமதாஸாவின் சிறப்புச் செய்திகளை ஜனாப் மன்சூர் இருவரிடமும் கையளித்தார். (ஓ-எ)

## கற்சிலைமடுவில் தேடுதல்; காட்டை நோக்கி ஷெல்வீச்சு

ஒட்டுசுட்டான் ஆகஸ்ட் 23

நீண்ட இடைவேளைக்குப் பின்னர் ஒட்டுசுட்டானில் படையினர் தேடுதலில் ஈடுபட்டனர்.

கடந்த திங்கட்கிழமை கற்சிலைமடு, முத்துஐயன் கட்டுப் பகுதிகளில் படையினர் தேடுதலில் இறங்கினர். சிலர் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

அதேசமயம் கற்சிலைமடு குளத்திற்கு அண்மித்த காட்டுப் பகுதியை நோக்கி ஷெல்கள் ஏவி விடப்பட்டன.

இவற்றில் சில குடியிருப்புப் பகுதிகளிலும் போய் விழுந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (ஓ-113)

## ஹட்டன் நாஷனல் வங்கியில் பணம், நகை கொள்ளை!

### பதுளையில் திங்களன்று சம்பவம்

ஆயுதம் தரித்த கோஷ்டி ஒன்று நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை காலை 10 மணிக்கு அளவில் ஹட்டன் நாஷனல் வங்கியின் பதுளைக் கிளைக்குள் புகுந்து பதினறு லட்சம் ரூபாவுக்கு அதிகமான பணம், நகைகளை கொள்ளையடித்துச் சென்றதாக முறையிடப்பட்டுள்ளது.

இக்கோஷ்டி கொள்ளைக்கு பயன்படுத்திய ஜீப் ஹாலி எல பகுதியில் றில்பொல என்னுமிடத்தில் அனாதரவாக கிடக்க பொலீஸாரால் கண்டு பிடிக்கப்பட்டது. (ஓ-எ)

## பயிலுநர் ஆசிரியர் தெரிவு; தொண்டர் ஆசிரியர் அறிக்கை

யாழ்ப்பாணம், ஆகஸ்ட் 23

பயிலுநர் ஆசிரியர்களைத் தெரிவு செய்வதற்கு இலங்கை அரசு எடுத்துவரும் நடவடிக்கைகளைக் கண்டித்து தென்மராட்சி தொண்டர் ஆசிரியர் துண்டுப்பிரசுரம் ஒன்றை வெளியிட்டுள்ளனர்.

காலம் காலமாக பல வழிகளிலும் ஒடுக்கு முறைகளுக்கு உள்ளடக்கப்பட்ட எமது தேசத்தில் இன்று மத்திய அரசின் ஆசிரிய நியமனத்திற்கு எடுக்கும் முயற்சியானது தற்போது பாடசாலைகளில் கல்வி கற்பிக்கும் தொண்டர் ஆசிரியர்களை நிர்க்கதியாக்கும் ஒரு முயற்சியாகும்.

வட-கிழக்கு மாகாண அரசிற்கு பூரண அதிகாரம் வழங்காத நிலையில் மத்திய அரசின்

(6ஆம் பக்கம் பார்க்க)

## களுத்துறையில் 8 சடலங்கள் கிராண்ட்பாஸில் தேடுதல்

கொழும்பு, ஆகஸ்ட் 23

களுத்துறை மாவட்டத்தில் வீதி ஓரத்தில் அடையாளம் காணப்படாத 8 பேரின் சடலங்களைப் பொலீஸார் கண்டெடுத்தனர்.

கொழும்பு, கிராண்ட்பாஸில் வீடு, வீடாகத் தேடுதல் இடம்பெற்றது.

வன்செயல்கள் பற்றிய தொகுப்பு வருமாறு;

★ மாத்தறை மாவட்டத்தில் டிக்வல பகுதியில் தீவிரவாதிகளின் மறைவிடம் ஒன்றைப் பாதுகாப்புப் படையினர் முற்றுகையிட்டனர்; அப்போது இடம்பெற்ற கடும் மோதலின் போது ஒன்பது தீவிரவாத சந்தேக நபர்கள் கொல்லப்பட்டனர். ஆறுபேர் காயமடைந்தனர்.

★ கிராண்ட்பாஸில் பொலீஸார் வீடு, வீடாகத் தேடுதல்

(6ஆம் பக்கம் பார்க்க)

### சுபநேரம்

[23 - 8 - 1989]

ஆவணி—7 புதன்கிழமை

நக்ஷத்திரம்: பரணி

சுபநேரம்:

04-35 முதல் 6-05 வரை

ராகுகாலம்:

12-05 முதல் 01-35 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்.

நல்லூர் கந்தசுவாமி கார்த்திகை உற்சவம்

## 4 பொலீஸார் உயிரிழப்பு

கொழும்பு, ஆகஸ்ட் 23

தென்மாகாணத்தில் பொலீஸ் வாகனம் ஒன்றின் மீது இனந்தெரியாதோர் குண்டு வீசித் தாக்கினர்.

அதில் இரண்டு பொலீஸ்காரர் உயிரிழந்தனர்.

கம்பஹாவில் நடந்த இன்னொரு சம்பவத்தில் பொலீஸ் சார்ஜண்ட் ஒருவரும் கான்ஸ்டபிள் ஒருவரும் இனந்தெரியாத நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டனர். (ஓ-எ)

## மன்னாரில் ஊரடங்கும் தேடுதலும்

யாழ்ப்பாணம், ஆக 23

மன்னார்ப் பகுதியில் நேற்று உத்தியோகபூர்வமற்ற ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டதாக அறிய வந்தது.

மன்னார் பகுதியில் அடுத்தடுத்து இடம்பெற்ற மோதல் சம்பவங்களைத் தொடர்ந்தே இத் தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஓ 9)

## மந்திரவாதி உட்பட 14 பேர் பலி

கொழும்பு, ஆகஸ்ட் 23

மாத்தறை, டிக்வெலயில் "தொவில்" சமய நிகழ்ச்சியில் கலந்து கொண்டவர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் 14 பேர் உயிரிழந்தனர். ஒன்பது பேர் காயமடைந்தனர் என்று அப்பகுதி வாசிகள் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர்களில் மந்திரவாதியும் மேளம் அடிப்பவரும் அடங்குகின்றனர்.

இதேவேளை மோதல் ஒன்று இடம் பெற்றதாகவும் அதில் ஒன்பது தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர் என்றும் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன. (ஓ-எ)

## கிராமசேவையாளர் மாகாண சபையின் கீழ்

கொழும்பு, ஆக. 23

கிராமசேவையாளர் சேவை நவம்பர் முதலாம் திகதி தொடக்கம் மாகாண சபைகளின் கீழ் கொண்டுவரப்படவுள்ளது.

இதன்படி நாடெங்கிலும் பணிபுரியும் 14 ஆயிரம் கிராமசேவையாளர் மாகாணசபைகளின் கீழ் பணிபுரிவர்.

இத்தகவலை மாகாணசபை அமைச்சர் யு. பி. விஜேக்கூன் நேற்றுத் தெரிவித்தார். (ஓ-எ)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### தேவை

முகவர் நிலையம் ஒன்றிற்கு அனுபவமுள்ள ஆங்கில தட்டச்சாளர் (பெண்) ஒருவர் தேவை: சம்பளம் பேசி தீர்மானிக்கப்படும். தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: Dilka மேல்மாடி 404/1 Hospital Road Jaffna. (C/3538)

35 வயது இந்து வேளாள குலப் பெண்ணுக்கு மாதாந்த வருமானம் பெறும் நற்குணமுள்ள மணமகன் தேவை: தகுந்த சீதனம் வழங்கப்படும்: குறிப்பு, தொழில் போன்ற முழுவிபரங்களுடன் விண்ணப்பிக்கவும். C/o No 85, உதயன். [11745]

### சேவை

இல்லத்தரசிகளே! மிளகாய் அரிசி மற்றும் தானிய வகைகளை எம்மிடம் உங்கள் விருப்பப்படி அரைத்துப் பெற்றுக் கொள்ளலாம்: நெல் குற்றியும் கொடுக்கப்படும்: நளினி இறைண்டிங் மில், 730, K. K. S. வீதி, (இந்துக் கல்லூரியடி) யாழ்ப்பாணம். (1677)

### சோதிடம்

உங்கள் எதிர்காலத்தை உணர்ந்து கொள்ள திருக்கணிதவியல் சோதிட நிபுணர் T. Shanmuganathan. Sempadolai, Emayanan, East Udupiddy. (1584)

### கரும்பு விற்பனைக்கு

நல்லூரில் கரும்பு வியாபார நண்பர்களுக்கு எம்மிடம் நன்ருக முற்றிய நல்ல இளஞ் செங்கரும்பு தொகையாக விற்பனைக்குள்ளது. வை. பேரம்பலம், தலையாளி, கொக்குவில். (1691)

### விற்பனைக்கு

அலுமாரி சாப்பாட்டு மேசை, கதிரை, கண்ணடி மேசை - 2 கட்டில், மெத்தையுடன் மற்றும் வீட்டுத் தளபாடங்களும் மலிவு விலையில் விற்பனைக்குண்டு தொடர்பு: K. தியாகராசா, இல: 30 செம்மணி வீதி, முத்திரைச் சந்தை, நல்லூர் (சேச்சுக்கு முன்பு) (1582)

நல்லநிலையிலுள்ள கொண்டா C - 90 மோட்டார் சைக்கிள் இரண்டு விற்பனைக்கு உண்டு: தொடர்புகொள்ள வேண்டிய முகவரி: 65 A, அரசடி வீதி, யாழ்ப்பாணம். (1587)

எம்மிடம் அண்மையில் வெளியிடப்பட்ட மருத்துவ நூல்கள் [Medical Books] அதி நவீன கம்பியூட்டர் நூல்கள் [Latest Computer Books] கதைப் புத்தகங்கள், பாடப் புத்தகங்கள் மற்றும் சகலவிதமான வாழ்த்து மடல்களையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்: மண்டேலா ரேடர் [புத்தகசாலை] இல: 02 பஸ் நிலையம், யாழ்ப்பாணம். [1551]

நல்ல நிலையிலுள்ள நீர் இறைக்கும் இயந்திரம் (வில்லியஸ் -12) உடன்விற்பனைக்கு உண்டு. இளையதம்பி — இராசேந்திரம் (கிளி) பாரதிலேன, நாயன் மார்கட்டு, நல்லூர். (1568)

National G1 (Genlock) Panasonic A 2 வீடியோகமரா விற்பனைக்கு உண்டு: பாரத் வீடியோ சென்ரர், 51/1, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். (1561)

### காணி விற்பனைக்கு

அச்சுவேலி பத்தமேனியில் தென்மூலையில்-அர்ச். அந்தோனியார் கோவிலுக்கு பின்புறமாக வீடு கட்டக்கூடிய காணி 2 பரப்பு விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரிகள், அ. பிரான்சிஸ் சேவியர், 37, பெரிய தம்பனை, மடுக்கோவில் அல்லது, த. முத்துராசா குடியிருப்பு, வவுனியா. (1572)

### கோழிக் குஞ்சு விநியோகம்

Golden Comet பிறவுண் பேட்டுக் குஞ்சுகள் சேவற் குஞ்சுகள் 23 ஆம் திகதி புதன்கிழமையும், Hybro புறொயிலர் குஞ்சுகள் 24 ஆந் திகதி வியாழக்கிழமையும் விநியோகிக்கப்படும். முன் கூட்டியே பதிவு செய்க: சற்குணராஜா & பிறதர்ஸ், பிரம்படி லேன், கொக்குவில். (1672)

### மணமகள் தேவை

உயர்வேளாள குலமும் சகல நற்குணங்களுடைய 31 வயது டாக்டர் (M. B. B. S.) மணமகனுக்கு (விரைவில் வெளிநாடுசெல்ல இருப்பவர்) அதே குலமும் அழகும் (டாக்டர் பட்டதாரி விரும்பத்தக்கது) உடைய மணமகள் தேவை: மணமகளின் சாதகம் குற்றமற்றது புகைப்படம் குறிப்புடன் தொடர்புகொள்ளவும். 579, C/o Uthayan. (1689)

### மணவாளன் தேவை

யாழ்ப்பாண இந்து வேளாள செவ்வாய்க் குற்றமுள்ள 25 வயது வர்த்தக நிர்வாகப்படிப்போடு விரைவில் அவுஸ்திரேலியா செல்லும் பெண்ணுக்கு டாக்டர், எஞ்சினியர், எக்கவுண்டன் தேவை: எம்மிடம் மணமக்கள் பலர் இருக்கிறார்கள். மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம் யாழ்ப்பாணம். (1589)

### A/L இரசாயன நூல்

ஆசிரியர் சத்தீஸ் அவர்களின் பின்வரும் நூல்கள் வெளியாகி உள்ளன: அடிப்படை இரசாயனம் பகுதி I. அடிப்படை இரசாயனம் பகுதி II, சேதன இரசாயனம் பகுதி II புத்தகசாலைகளில் கிடைக்கும். நேரில் பெறுவோர்க்கு விசேட கழிவு உண்டு. (1668)

### கோழிக்குஞ்சு விநியோகம் (Uplands Farm)

[Cobb] புறொயிலர் குஞ்சுகள் (23 - 08 - 89) புதனும் (Dekalb) பிறவுண் பேட்டுக் குஞ்சுகள் சேவற்குஞ்சுகள் (30 - 08 - 89) புதனும் விநியோகிக்கப்படும். (தடுப்பூசி போடப்பட்டது) முன் கூட்டியே பதிவு செய்க. இல. 9 கந்தையா லேன், சுன்னுகம். (புகையிரத நிலையத்துக்கு அருகில்) குறிப்பு:- எங்கள் குஞ்சுகளுக்கு இரவில் லைட் அவசியமில்லை. (1606)

### St JUDE

Most Grateful Thanks to Sacred Heart of Jusus. St. Jude and the Divine Holy Spirit for A Heartfelt Request Answered J. P. S. (1675)

### மீண்டும் வந்து விட்டன

பொம்மை, அம்புலிமாமா, (யூலை, ஆகஸ்ட்) மங்கை (ஆகஸ்ட்) ஞானபூமி (யூன்) ராஜன் புத்தகசாலை, பஸ் நிலையம், யாழ்ப்பாணம். (1680)

### கண்டெடுக்கப்பட்டது

மாணிக்கம் சுபேந்திரன் 650982614 V சண்முகம் ஜெயராணி 606252287O V இரு அடையாள அட்டைகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன: உரியவர் தகுந்த அத்தாட்சியுடன் சிவகுமார பாடசாலை சேவை கோண்டாவில் வடக்கு பஸ் டிப்போவுக்கு முன் தொடர்பு கொள்ளவும். (11744)

### G. C. E. (O/L) கணிதம்

5 மாதிரி வினுத்தாள்களும் 1988 வினுத்தாள் (விடைகளுடனும்) மயூரதி வெளியீடு- 4 ரூபா13 75 7மாதிரிவினுத்தாள்கள் செய்கைகளுடன் மயூரதி வெளியீடு - 5. ரூபா 17 50. பூபாலசிங்கம், ஸ்ரீலங்கா, ஞானசுரபி, துர்க்கா ஸ்ரேஷனர்ஸ், மற்றும் புத்தகசாலைகள். (1389)

### கோழிக் குஞ்சு விநியோகம்

ஹைலைன் (Hyline) சிவப்பு. கறுப்பு வெள்ளை பேட்டுக் குஞ்சுகள் புளிமத் கறுப்பு சேவல் புறொயிலர் ஆகிய குஞ்சுகள் 29-8 89 செவ்வாய்க்கிழமை விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவு செய்க. S T.R. அன் சன் மாஸ்கடை, திருநெல்வேலி சந்தி. (1693)

### இறைச்சிக் கோழி விற்பனைக்கு

புறொயிலர் (இறைச்சிக் கோழி, விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- "இரத்தின பவனம்", ஸ்டேசன்வியூ, மாவிட்டபுரம். (1662)

### தவறிவிட்டது

பே. மெய்யழகன் ஆகியஎனது தேசிய அடையாள அட்டையும் கல்லூரி அடையாள அட்டையும் கோதீவிற்கும் மன்னருக்கும் இடையில் தவறிவிட்டது. எடுத்தவர்கள் தலையாளி கொக்குவில் என்ற முகவரிக்கு பணிவுடன் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். (1690)

### TYPEWRITER

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும் விற்கவும் சிறந்த முறையில் திருத்திக் கொள்ளவும், தமிழ், ஆங்கில ரைப்பிங் செய்து கொள்ளவும் நாடுங்கள், Fudo Enterprises 39/17, மின்சார நிலைய வீதி, 3ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (சி/3264)

### Spoken English

வெளிநாட்டுப் படிப்பு, உயர்கல்வி போன்ற அத்தியாவசிய நோக்குடன் 30 தொடர் வகுப்புகள் சனி, ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாட்களில் காலை 7.30-9.00 மணி வரை: ஆரம்பம்: 24-08-89 முன் பதிவு செய்யவும்: S.B. Iyar 12 வைமன் வீதி, நல்லூர். [1550]

## சமையல் பாத்திரங்கள்

பச்சிலைப்பள்ளி ஆக. 23

பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் அண்மையவன்செயல்களினுல் பல்வேறு வகையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இந்திய அரசாங்கத்தினுல் வழங்கப்பட்ட சமையல் பாத்திரங்கள் விரைவில் விநியோகிக்கப்படவுள்ளன:

இதற்கான விவரங்கள் அவ்வப்பகுதி கிராம சேவை அலுவலர்களால் பெறப்பட்டு வருவதாக அறியப்படுகிறது. (க - 117)

## காலக்கெடு

முல்லைத்திவு ஆக. 23

முல்லைத்திவு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் வெதன வீடமைப்பு மானியம் மூலம் வீடுகளைக் கட்ட நிதி உதவி பெற்றவர்கள் இம்மாதம் 31 ஆம் திகதிக்கு முன் வீடுகளைக் கட்டி முடிக்க வேண்டுமென முல்லை மாவட்ட தேசிய வீடமைப்பு அதிகார சபையின் மாவட்ட முகாமையாளர் திரு. கே. ரி எம். விஜயகுமார் அறிவித்துள்ளார். (க - 92)

## பணிவான வேண்டுகோள்!

கடந்த செவ்வாய்க்கிழமை (15- 08- 89) காலை 10. 50 மணியளவில் கைதடி தச்சன்தோப்புச் சந்தியில் இனந்தெரியாத இரண்டுபேர் எனது மோட்டார் சைக்கிளை (MD 50, சிவப்பு - எஞ்சின் இல. 1603740) உடன் திருப்பித் தருவதாகக் கூறி எடுத்துச் சென்றனர். ஆனல் இன்றுவரை அது எனக்கு மீண்டும் கிடைக்கவில்லை. தயவுசெய்து என்னிடம் மீள ஒப்படைக்குமாறு மிகத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

ந. பஞ்சாட்சரம்
தச்சன்தோப்பு,
கைதடி. (1684)

காரைநகர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்: காரைநகர்.

## வெற்றுச் சாக்கு கேள்விப் பத்திர மூலம் விற்பனை

காரைநகர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் வெற்றுச் சாக்குகள் கேள்விப் பத்திர மூலம் விற்பனை செய்யப்படும். சாக்குகளை பெற விரும்புவோர் ரூபா 250 00 ஒப்பந்த முற்பணமாக வைப்புச் செய்து தமது 28. 08. 89 நண்பகல் 12 மணிக்கு முன்பாக விண்ணப்பிக்கவும்.

பொது முகாமையாளர்.

பணிமனை,
காரைநகர் ப. நோ. கூ. சங்கம்
காரைநகர். 21. 8. 89. (C/3535)

## நாம் நல்ல பழக்கங்களை சிறுவயதில் கற்க வேண்டும்

### பாலர் பராமரிப்பு நிலைய விழாவில் உரை

கோப்பாய், ஆக 23

சிறு வயது முதல் நாம்நல்ல பழக்க வழக்கங்களை கற்றுக் கடைப்பிடிக்க வேண்டும்.எமது வாழ்க்கையை முன்னேற்ற உதவும். நாம் பொது நல உணர்வுடன் வாழப் பழக வேண்டும்.

கோப்பாய் வடக்கு பரிசுத்த கன்னி மரியாள் ஆலய பாலர் பகற் பராமரிப்பு நிலைய ஆரம்ப விழாவில் உரையாற்றிய நல்லூர் புனித ஜேம்ஸ் ஆலய சபைக்குரு வண. ஜசக் செல்வரத்தினம் மேற்கண்டவாறு தெரிவித்தார்

திரு. சி. நவரத்தினம், திரு. க. சுப்பிரமணியம், திரு ரி. ஆர். செல்வரத்தினம் ஆகியோர் இவ் விழாவில் ஆசியுரை வழங்கினுர்கள்.

இறுதியில் பரி. கன்னி மரியாள் ஆலய குரு வண. ஈ. ஜே. ஜெயராஜாவின்ஜெபத்துடன் விழா முடிவுற்றது.

இந்த பாலர் பகற் மராமரிப்பு நிலையத்துக்கு இலங்கை கிறிஸ்தவ சவுன்சிலின் நிவாரண ணர் நிர்மாணசபை நிதி உதவி அளித்துள்ளது. (க-72)

## சூசைதாசன் கனடா பயணம்

யாழ்ப்பாணம், ஆக 23

மன்னர் முன்னுள் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. எஸ். சூசைதாசன் அண்மையில் கனடா பயணமானர்.

கனடாவில் தனியார் நிறுவனமொன்றில்கணக்காளராக இவர் நியமனம் பெற்றுள்ளார். (இ 21)

## மாகாணசபை வழங்கிய பவுசர்

வடக்கு, கிழக்கு மாகாண சபை, சம்மாந்துறைப் பகுதி முஸ்லிம் மக்களின் குடிநீர்த் தேவையை நிவர்த்திப் தற்கென பவுசர் ஒன்றைவழங்கியுள்ளது 14 லட்சம் ரூபா பெறுமதியான இந்தப் பவுசர் மூலம் நீர்விநியோகிக்கும் ஆரம்ப வைபவம் அண்மையில் நடைபெற்றது. (க 14)

## அறுவடைக்கு இளைஞர் இல்லை

மட்டக்களப்பு, ஆக 23

மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களில் தற்போது நடைபெற்று வரும் சிறுபோக வேளாண்மை அறுவடையி நடுத்தர வயதானவர்களும் பெண்களும் காணப்படுகிறுர்கள்.

இளைஞர்களைக் காண்பது அரிதாக இருக்கிறது.

கூலியாட்கள் பற்றுக்குறை காரணமாக அறுவடைக்கான கூலியும் அதிகரித்துள்ளது: ஏக்கருக்கு ரூ. 300 முதல் 350 வரை கூலி அறவிடப் படுகிறது. (இ-21)

## நியமனங்கள்

யாழ்ப்பாணம், ஆக. 23

கிளிநொச்சி கல்வித்திணைக்களத்தின் கல்வி அதிகாரியாக திரு. பொன். சபாபதி நியமனம் செய்யப்பட்டுள்ளார்

இவர் முன்னர் உருத்திரபுரம் கொத்தணிப் பாடசாலைகளின் கொத்தணி அதிபராக கடமை ஆற்றினர்.

உருத்திரபுரம் கொத்தணிப் பாடசாலைகளின் கொத்தணி அதிபராக திரு. மகாலிங்கம் பத்மநாதன் பதவி உயர்வுடன் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

இவர் முன்னர் பரந்தன் இந்து மகா வித்தியாலயத்தில் அதிபராகக் கடமை ஆற்றினர். (க-76)

# கேள்வி அறிவித்தல்

## வடக்கு கிழக்கு மாகாண அரசு கட்டடங்கள் திணைக்களம்

மேற்படி அரசினல் கீழ் வரும் கேள்விகள் திருகோணமலை உள்துறைமுக வீதி, வடக்கு — கிழக்கு மாகாண அரசுக் கட்டடங்கள் திணைக்களத் தலைவரினுல் 1989ஆம் ஆண்டு செப்டெம்பர் 20 ஆம் திகதி புதன்கிழமை 10. 00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

(அ) நாவற்குழி உணவுக்களஞ்சியம் திருத்தல் Group I Eastern Side 3 Bays
(ஆ) நாவற்குழி உணவுக்களஞ்சியம் திருத்தல் Group II Western Side 3 Bays
(இ) நாவற்குழி உணவுக்களஞ்சியம் திருத்தல் Group III Middle Side4 Bays
(ஈ) நாவற்குழி உணவுக்களஞ்சியம் திருத்தல் மிகுதி வேலைகள்

2. (அ) 1, 500, 000/- (ஆ) 1, 500, 000/- (இ) 2, 000 000/- (ஈ) 1, 500, 000/- ற்கு அல்லது அதற்கு மேற்பட்ட தொகைக்கு கட்டடங்கள் திணைக்களத்தினுல் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களும். அதே அளவு அல்லது அதற்கு மேற்பட்ட தொகைக்கு கட்டடங்கள் திணைக்களத்தினுல் வழங்கப்பட்ட பரிசிலிப்புக் கடிதங்களை வைத்திருப்போரும் இக் கேள்விக்குத் தகுதியுடையோராவர்.

3. மேற்படி கேள்வி அறிவித்தல் 1989 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 12 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4.15 மணிவரை நிறைவேற்றுப் பொறியியலாளர், அலுவலகம், கட்டடங்கள் திணைக்களம், கடற்கரை வீதி யாழ்ப்பாணத்தில் பெற்றுக்கொள்ளப்படும் கேள்வி வைப்புக்கு சமர்ப்பிக்க வேண்டிய கீழ்க் கண்டவற்றை ஏதாவது கச்சேரியில் அல்லது கட்டடங்கள் திணைக்களம், உள்துறைமுக வீதி திருகோணமலையில் பணமாக வைப்புச் செய்து கொள்ளலாம்.

| | | |
|---|---|---|
| (அ) | மீளளிக்கப்படாத வைப்புப் பணம் | 500/- |
| | மீளளிக்கப்பட்ட வைப்புப் பணம் | 15, 000/- |
| (ஆ) | மீளளிக்கப்படாத வைப்புப் பணம் | 750/- |
| | மீளளிக்கப்பட்ட வைப்புப் பணம் | 16, 000/- |
| (இ) | மீளளிக்கப்படாத வைப்புப் பணம் | 750/- |
| | மீளளிக்கப்பட்ட வைப்புப் பணம் | 21, 000/- |
| (ஈ) | மீளளிக்கப்படாத வைப்புப் பணம் | 500/- |
| | மீளளிக்கப்பட்ட வைப்புப் பணம் | 19, 000/- |

4. கேள்வி ஆவணங்கள் இலவசமாக பரீட்சிக்கப்படும் அத்துடன் எதும் விபரங்களை நிறைவற்றுப் பொறியியலாளர், கட்டடங்கள் திணைக்களம், கடற்கரை வீதி, யாழ்ப்பாணத்தில் காரியாலய நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.
5. கேள்வி தாரர் தனியார் கம்பனிகளாயின் அவை தமது தற்போதைய பணிப்பாளர்களதும் பங்குதாரர்களினதும் பெயர்களைக் குறிப்பிட வேண்டும்.

சி. சுப்பிரமணியம்
பணிப்பாளர்,
கட்டடங்கள் திணைக்களம்,
திருகோணமலை.

உள்துறைமுக வீதி,
திருகோணமலை. (சி/3236)

## முதலாம் வருட நினைவஞ்சலி



திருமதி
### நேசம்மா நடராசாச் செட்டியார்

சிவபதமடைந்த எங்கள் குல தெய்வமான திருமதி நேசம்மா நடராசாச் செட்டியார் அவர்களின் நினைவஞ்சலி இன்று (23 - 08 - 89 புதன்கிழமை) நடைபெறும். அதில் கலந்து அன்னரது ஆன்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கும் வண்ணம் உற்ருர், உறவினர் அயலவர், நண்பர்கள் அனைவரையும் மிகவும் விநயத்துடன் கேட்டுக்கொள்கின்ருேம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

276 பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம். (1593)

## 16 ஆம் நாள் நினைவு தினம்

உதிப்பு: 30 | 04 | 1968



உதிர்வு: 08 | 08 | 1989

செல்வன்
### நாகராஜா மதனராஜன்
(உதயன் நாளிதழ்)

அன்பிற்கோர் அருமைத் தம்பியடா — நீ
ஆளுமைக்கோர் ஆசை அண்ணனடா
இளமைக்கோர் இனிய தோழனடா — நீ
சன்றவர்க்கோர் அன்புப் புதல்வனடா
★ ★ ★ ★ ★ ★
உறவினர்க்கோர் உற்ற தனயனடா — நீ
ஊரவர்க்கோர் நல்ல தொண்டனடா
எழுத்திற்கோர் வண்ண மகுடமடா — உன்
ஏற்ற வாழ்க்கையது வாழுமடா
★ ★ ★ ★ ★ ★
அரவொன்று வந்துன்னைத்
தீண்டியதோ — உந்தன்
உயிரையது உலகை விட்டு
உய்ய வைத்ததுவோ?
★ ★ ★ ★ ★ ★
இரவொன்று சூழ்ந்துன்னை
மறைத்தாலும் — அன்பா
மறையாது உன் நினைவு எம்மை விட்டு!

அப்பா, அக்கா, தம்பி, தங்கை,
மற்றும் நண்பர்கள்.

(3238)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

குறள்:

கருமம் செயஒருவன் கைதூவேன் என்னும்
பெருமையின் பீடுடையது இல்.

பொருள்:

குடிப்பெருமைக்கு உரிய கடமையைச் செய்வதற்குச் சோர்வடைய மாட்டேன் என்று ஒருவன் முயலும் பெருமையைப் போல மேம்பாடானது வேறொன்று இல்லை.

உதயன்

இல. 192/2, காங்கேசன்துறை வீதி, தொலைபேசி 24800 / 23071
யாழ்ப்பாணம்;
23 - 08 1989　　த. பெ. இல. 11

## கண்களைத் திறக்க வைக்குமா?

ஏயர் லங்கா விமானக் குண்டு வெடிப்பு வழக்கில் நீதிபதி வழங்கிய தீர்ப்பு பல வகைகளிலும், பல தரப்பினரதும் கண்களைத்திறக்க வைக்குமா?

அரசாங்க இயந்திரத்தின் ஓர் அங்கமான பொலீஸ் பிரிவு தனது எண்ணத்தை ஈடேற்ற எவ்வளவு அநாகரிகமான முறையிலும், சனநாயக விரோத முறையிலும் நடந்து கொள்கிறது என்பதற்கு அந்தத்தீர்ப்பு ஓர் எடுத்துக் காட்டாகும். பொலீஸ் பகுதியும் அரசாங்கமும் மறைத்து வந்த சட்டவிரோதச் செயல்களை வெளிச்சத்துக்குக் கொண்டு வந்த பெருமையும் மேல்நீதி மன்றத் தீர்ப்புக்கு உரியதாகும்: நீதியின் கரங்களிலிருந்து பொய்யும், அடாத்தும், குற்றமும் தப்பமுடியாது என்பதற்கும் ஓர் உதாரணமாக அது அமைகிறது எனலாம்.

சட்டத்தை அமுல் செய்ய வேண்டியவர்கள், சரிவர நடைமுறைப்படுத்த வேண்டியவர்கள் பொலீசார்: ஆனால் அவர்களே சட்ட அமுல் என்ற பெயரில் சட்டத்தை மீறியும், மனித உரிமைகளை மீறியும் நடக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டு மிகப் பழையது: எனினும் அந்தக் குற்றச்சாட்டு நிரூபிக்கப்படுவதும், அந்தக் குற்றத்தைப் புரிந்தமைக்காக சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்கள் தண்டிக்கப்படுவதும் மிக அபூர்வம்.

சட்டத்தின் அதிகாரத்தைத் தமது கையில் எடுத்துக் கொண்டு தாம் செய்யும் அநியாயங்கள், அடாவடித்தனங்கள், மனித உரிமை மீறல்கள் ஆகிய சகலவற்றையும் மூடி மறைப்பதும், அப்படி ஏதும் செய்யவில்லை என்று நிராகரிப்பதும் பொலீசாரின் நடைமுறை வழக்கமாக இருந்து வருகிறது. கீழ்மட்டத்தில் உள்ள உத்தியோகத்தர் புரியும் குற்றத்தை அவருக்கு மேல் மட்டத்தில் உள்ள அதிகாரி மறைத்துச் "சரிக்கட்டி" விடுவார். அதே போல மேல் மட்டத்தில் உள்ளவர் புரியும் அதிகார வரம்பு மீறலை அவருக்கு உயர்ந்த படியில் உள்ள அதிகாரி மறைத்துக் காப்பாற்றிவிடுவார். அந்த உயர் அதிகாரி செய்த தவறை அமைச்சு மட்டத்தில் உள்ளவர் முழுப் பூசினிக்காயை சோற்றில் புதைப்பது போல மறைத்து விடுவார்.

இந்த மறைப்பு நாடகத்தால் பொலீசார் கையில் அகப்படும் சந்தேக நபர்கள், கைதானவர்கள் தடுத்து வைக்கப்படுபவர்கள், விசாரணைக்கு உட்படுத்தப்படுபவர்கள் படும்பாடு, அனுபவிக்கும் அவஸ்தைகள், சித்திரவதைகள், மனித உரிமை மீறல்கள் என்பனவும், அவை பற்றிய குற்றச்சாட்டுகளும் நீர் மேல் எழுத்தாகி விடுவது உண்டு.

பொலீசாரின் இந்தத் 'தற்காப்பு' முறைகளை நன்றாகத் தெரிந்த ஏனைய படையினரும், தமக்குப் பொலீஸ் அதிகாரம் கிடைக்கும் போதெல்லாம் சட்டத்துக்கு மேலே நின்று 'கூத்தாடி' மக்களை இம்சைப்படுத்துகிறார்கள்!

அவசரகாலச் சட்டம், பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் ஆகியவற்றின் துணைகொண்டு ஆயுதப் படையினர் தமிழ் இளைஞர்களை எவ்வாறு சித்திரவதை புரிந்தார்கள், மனித உரிமைகளை எப்படி மீறினார்கள், அராஜகத்தை எந்தளவுக்குக் கட்டவிழ்த்து விட்டார்கள் என்பது ஒரு வரலாறாகவே ஆகிவிட்டது:

தமிழ் இளைஞர் மீது நடத்தப்பட்ட அடாவடித்தனம் யாவும் இப்போது சிங்கள இளைஞர்களுக்கும் பிரயோகிக்கப்படாமல் இருக்கிறது என்று எண்ண இடமில்லை.

காக்கிச் சட்டைக்குள் புகுந்து கொண்டு, கையில் ஆயுதத்தை ஏந்திவிட்டால் தம்மைத் தட்டிக் கேட்க எவருமில்லை. சட்டமும், நீதிமன்றமும் தமக்குப் பொருட்டல்ல; சர்வ அதிகாரமும் தங்களிடமே என்ற மமதையும் போதையும் படையினருக்குத் தலைக்கேறி விடுகிறது. தாம் சாதாரண மனிதர்களுக்கு அப்பாற்பட்ட உயர் மனிதர்கள் என்று எண்ணிவிடுகிறார்கள்.

இந்த நிலைப்பாடு படைகளிடம் இருந்து ஒட்ட நறுக்கி எறியப்பட வேண்டும். சட்டத்தைத் தமதாக்கிக் கொண்டு, துஷ்பிரயோகம் செய்யும் விதத்தில் நடந்து கொள்ளும் படை வீரர்களின் அசுரத்தனங்கள், அத்துமீறல்கள் நீதிமன்றங்களில் அம்பலப்படுத்தப்பட வேண்டும்; அவர்களுக்கும் தண்டனையும் வழங்க வேண்டும்.

ஆனால் குற்றமிழைத்தவர்களுக்குப் பதவி உயர்வு வழங்குதலும், அவர்களது குற்றங்களைத் தவிர்க்கச் சட்டமியற்றுதலும் என்ற வேலியே பயிரை மேயும் காலமாகி விட்டது இப்போது! படைகளைக் காப்பாற்ற நாடாளுமன்றம் இருக்கிறது. ஆனால் மக்களைக் காப்பாற்ற அரசும் இல்லை; சபையும் இல்லை என்றாகி விட்டது. இதுவும் ஒரு காலமாற்றமோ?!

## நல்லூர் உற்சவகாலச் சிறப்பம்சம்

### பார்த்து நீ இருப்பதேனோ?

கார்த்திகைத் திருநாளின்று கண்டிடவந்தோமையா
வார்த்தைகள் வருகுதில்லை வளருகின்ற கஷ்டம்சொல்ல
வேர்க்குதே உடம்புறுப்புக்கள் வேலவா! கார்த்திகேயா!
பார்த்துநீ இருப்பதேனோ? பகர் நல்லூர் வடிவேலோனே.

-நீர்வை பண்டிதர் நீ. சி. முருகேசு
(இன்று நல்லைக் கந்தன் கார்த்திகைத் திருவிழா)

# முல்லைத்தீவு - பரந்தன் வீதித்திருத்த வேலை

## பூர்த்தியாகாமல் இழுபறி

### மண்போட்டும் தார் இல்லாத நிலை

மாங்குளம், ஆக. 23

முல்லைத்தீவு — பரந்தன் வீதித் திருத்த வேலைகள் தாமதம் அடைகின்றன.

இதனால் பொதுமக்களே பெருமளவில் பாதிக்கப்படுகின்றனர் என்று கூறப்படுகிறது.

முல்லைத்தீவு— பரந்தன் வீதியில் முல்லைத்தீவில் இருந்து 10 ஆம் கட்டை வரை வீதியில் உள்ள குழிகள் நிரப்பப்பட்டு மண்போடப்பட்டிருக்கிறது.

கடந்த ஏப்ரல் மாதம் அளவில் இந்த மண்போடும் வேலைகள் பூர்த்தி அடைந்த போதிலும் தார் ஊற்றும் வேலைகள் இன்னும் ஆரம்பிக்கப்படவில்லையாம்:

ஒப்பந்தக்காரர்களுக்கான பணம் செலுத்தப்படுவதில் ஏற்பட்டுள்ள தாமதமே வீதித் திருத்த வேலைகள் தாமதம் அடையக் காரணம் என்று கூறப்படுகிறது. (இ- 94)

## 120 பேருக்கு புதிதாக நிவாரணம் வழங்க கார்ட்

முல்லைத்தீவு, ஆக 23

முல்லைத்தீவு, உதவி அரசாங்க அதிபரின் பிரிவில் வறுமை நிவாரணக் கோட்டுக்குக்கீழ் வாழும் 120 புதிய விண்ணப்பதாரருக்கு முல்லைத்தீவு உதவி அரசாங்க அதிபர் திரு: வி. கந்தசாமி உதவிப் பணம் பெறும் கார்ட்டுக்களை வழங்கினார்.

இவர்கள் ஜூலை 1 ஆம் திகதி முதல் கிடைக்கத்தக்கதாக உதவிப் பணத்தைப் பெறுவார்கள்.

தன்னுடைய பிரிவில் இவர்களுடன் சேர்த்து மொத்தம் 634 பேர் உதவிப்பணம் பெறுகிறார்கள் என்று உதவி அரசாங்க அதிபர் கூறினார். (இ-29)

## ஆசிரியர் கலாசாலைக்கு அனுமதி

மட்டக்களப்பு, ஆக 23

21-4-1989 க்கு முன்பு நியமனம் பெற்றுள்ள பட்டதாரி அல்லாத ஆசிரியர்கள் அடுத்த வருடம் ஆசிரியர் கலாசாலை அனுமதிக்கு விண்ணப்பிக்கும் தகுதி பெற்றுள்ளார்கள்.

சிங்களம் ஆரம்பக் கல்வி, அரபு, இஸ்லாம், சித்திரம், சங்கீதம், மனையியல், ஆங்கிலம், கணிதம், விவசாயம், விஞ்ஞானம் என்பன பாடநெறிகள் ஆகும்;

விண்ணப்ப முடிவு திகதி 11—9—89. (இ21)

## சுன்னாகம் மக்கள் வங்கிமூலம் 1,1830 விண்ணப்பதாரருக்கு ஒரு கோடி 28லட்சம் ரூபா

யாழ்ப்பாணம், ஆகஸ்ட் 23

சுன்னாகம், மக்கள் வங்கிக் கிளையில், மீளக்குடியமர்வுக்கான நிவாரணம், உற்பத்தித் திறன் வாய்ந்த தொழில் முயற்சிக்கான நன்கொடைப் பணம் என்பவற்றுக்காக இதுவரை 11830 விண்ணப்பதாரர்களுக்கு ரூபா 1 கோடி 28 லட்சம் பணமாக வழங்கப்பட்டுள்ளது:

மிகுதியான 3373 விண்ணப்பதாரர்களின் ரூபா 51 லட்சம் ரூபாவை விரைவில் வழங்கி முடிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்பதாகவும் அத்துடன் முதற்கட்ட நிவாரணக் கொடுப்பனவுகள் நிறைவு பெறும் என்றும் வங்கி நிர்வாகம் அறிவித்துள்ளது. (இ)

பல சிரமங்களுக்கு மத்தியிலும், வாரநாட்களில் கூட, வழமையான வங்கி அலுவல்களுடன் நிவாரணப் பணம் வழங்கக்கூடியதாக இருந்ததற்கு, கிளை ஊழியர்களின் ஒத்துழைப்பும், அவர்களது சேவை மனப்பான்மையுமே காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## மாசியப்பிட்டியில் 4 வீடுகளில் கொள்ளை!

குருநகர், ஆக: 23

ஆயுத பாணியாக வந்த இளைஞர் கோஷ்டி பல ஆயிரம் ரூபா ரொக்கத்தையும், நகைகள், கமெரா, மணிக்கூடுகள் என்பனவற்றையும் நான்கு வீடுகளில் இருந்து கொள்ளை அடித்துச் சென்றது.

இச் சம்பவம் மாசியப்பிட்டி கந்தரோடை வீதியில் இடம் பெற்றது:

இரவு 7 மணியில் இருந்து 9- மணி வரை இரண்டு மணித்தியாலங்கள் அப் பகுதியில் தங்கி நின்ற மேற்படி ஆயுதக் கோஷ்டி படப்பிடிப்பாளர் ஒருவரின் வீட்டிலும் பெறுமதியான பொருள்களை கொள்ளை அடித்துச் சென்றுள்ளதாகக் கூறப்படுகிறது: [இ-15]

## நல்லைக் கந்தன் ஆலயத்தில் இன்றுகார்த்திகை திருவிழா

யாழ்ப்பாணம், ஆக 23

நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த மஹோற்சவத் தொடரில இன்று புதன்கிழமை திருக்கார்த்திகை உற்சவம் நடைபெற இருக்கிறது:

உற்சவத்தில் கலந்து கொள்ளும் பக்தர்களின் வசதிக்காக விசேஷ ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன;

நல்லை ஆதீன தொண்டர்களும், இந்து இளைஞர் பேரவைத் தொண்டர்களும், செண் ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைத் தொண்டர்களும், சாரணீயர்களும் மாநகர சபைத் தொண்டர்களும் பக்தர்களுக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்துள்ளார்கள்;

காலை முதல் கூடும் பக்தர்களுக்கு தாகசாந்திக்காக தண்ணீர் பந்தல்கள் அமைக்கப்பட்டுள்ளன. (-3)

## சமய சந்நிதிகளில்

### கூடத்து மனோன் மணி ஆலயத்தில்

யாழ்ப்பாணம் ஆக. 23

சங்கானை கூடத்து மனோன் மணி அம்மன் ஆலயத்தின் மண்டலாபிஷேகப் பூர்த்தி சங்காபிஷேகம் இன்று காலை-6-00 மணிக்கு ஆரம்பமாகும்; அதனைத் தொடர்ந்து அன்னதானம் வழங்கப்படும்.

மாலை 3 - 30 மணிக்கு அம்மன் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட மஞ்சத்தில் திரு வீதி வலம் வருவார் சுந்தரமூர்த்தி குழுவினர், கானமூர்த்தி, பஞ்சமூர்த்தி குழுவினர். சங்கர் தட்சணாமூர்த்தி குழுவினர் ஆகியோரது மேளவாத்தியக்கச்சேரியும் இடம்பெறும். (இ)

### "அறவழி" ஆய்வரங்கு

சாவகச்சேரி, ஆக. 23

முன்னோடிகளால் ஏற்பாடு செய்யப்பட்ட "அறவழி" ஆய்வரங்கு கைதடி முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

டாக்டர் கே. ரி. எஸ். சபாநாதன் தலைமையில் ஆரம்பமான இந்த ஆய்வரங்கில் டாக்டர் எஸ். வடிவேலு முல்லைத்தீவு மேலதிக அரசாங்க அதிபர் திரு. கே; சண்முகலிங்கம், ஆசிரியர் எஸ். செல்வத்துரை ஆகியோர் உரையாற்றினார்கள்.

இணை ஆசிரியர் திரு: எம்; கே. துரைசிங்கம் அறிமுக உரையை நிகழ்த்தினார்.

ஐம்பதுக்கும அதிகமானோர் "அறவழி" பிரதிகளைப் பெற்றுக் கௌரவித்தனர். (க-31)

### பாலாவோடை - ஊரி பாதையின் நிலைமை

காரைநகர், ஆக: 23

காரைநகரில் அமைந்துள்ள பாலாவோடை-ஊரி போக்குவரத்துப்பாதை குன்றும் குழியுமாக காட்சியளிக்கிறது.

இதனால் மக்கள் போக்குவரத்து செய்வதில் பெரிதும் சிரமப்படுகின்றனர். இவ்வீதி சுமார் 20 வருடங்களாகத் திருத்தப்படாது இருக்கின்றது. (க-73)

## சொற்றமிழ் பாடி சைவம் வளர்த்த நற்றமிழ் வல்ல நல்லை ஸ்வாமிகள்

### -- இன்று 23ஆவது பீடாரோகண விழா --

இன்று நல்லை ஆதீனத்தின் 23 ஆவது பீடாரோஹண விழா நடைபெறுகிறது; அதையொட்டி இக் கட்டுரை பிரசுரமாகிறது;

"அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது" என்பது ஔவை வாக்கு. மானிடராய்ப் பிறந்தாலும் கூன் குருடு, செவிடு நீங்கிப் பிறத்தல் அரிது. அஃது நீங்கிப் பிறந்தாலும் ஞானமும் கல்வியும் நயத்தல் அரிது இந்த வகையில் நல்லையில் ஆதீனம் அமைத்து ஸ்வாமிகளாக மிளிர்ந்த ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய ஸ்வாமிகள் ஞானமும் கல்வியும் மட்டுமன்றி அருளும் அன்பும் சேர்ந்து நல்ல பண்புடன் விளங்கிய பரம ஞானி ஆவார்.

அவர் காஷாயம் பெற்று ஸ்வாமிகளாகி இன்று 23 ஆவது ஆண்டு நிறைவு பெறுகின்றது. ஆடிக் கிருத்திகை நட்சத்திரத்திலே துறவுபூண்டு கதாப்பிரசங்கம் மூலம் சைவமும் தமிழும் நன்கு தழைத்தோங்கும் வண்ணம் தமது தொண்டையினால் அரிய சொற்றமிழ் பாடித் தொண்டாற்றியவர் மறைந்த நல்லைக் குருமணி அவர்கள்.

'ஞானவிநாயகனே சரணம்' என்று நல்லூரில் அவர் கதை செய்யத் தொடங்கும் அந்த இனிய நாதம் இன்னமும் எமது காதில் கணீரென்று ஒலித்துக்கொண்டேயிருக்கிறது.

நெற்றியிலே திருநீறு தலையிலும் கழுத்திலும் ருத்திராக்ஷம் காவியுடை தரித்த கரிய உடம்பிலே பளிச்சென்று தெரியும் விபூதி, கண்களில் திவ்யமான ஒரு காந்த ஒளி வாயிலே புன்னகை, எந்நேரமும் முகமலர்ச்சியோடு அகமலர்ச்சியும் கொண்டு எவரையும் கவரக்கூடிய சாந்தமான தோற்றத்துடன் திகழ்ந்தவர் ஸ்வாமிகள்.

வெள்ளத் தனைய மலர் நீட்டம் மாந்தர்தம் உள்ளத் தனைய உயர்வு;

—இது அடிக்கடி ஸ்வாமிகள் கூறும் குறள் 'தேமதுரத் தமிழோசை செகமெலாம் பரவ வகைசெய்ய வேண்டும். சேரவாரும் 'ஜெகத்தீரே' என அழைத்து அவர் கதை செய்யும் பாணியே தனி.

அவருடைய இடத்துக்கு இனி எவருமே இல்லை. அவர் ஏற்படுத்திய வெற்றிடத்தை நிரப்ப யாராலும் முடியாது: ஸ்வாமிக்கு நிகர் ஸ்வாமிகளேதான்: வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சம் தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனை ஏத்தித்துதிப்பதிலேயே தம் வாழ்நாளைச் செலவிட்டவர் ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமிகள்;

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தை அமைத்து -பூசை வழிபாடு, சமயபாட வகுப்பு, புராணபடனம், கூட்டுப்பிரார்த்தனை, நூல்வெளியீடு என்றின்னோரன்ன பலவழிகளிலும் சேவையாற்றித் தமிழ் வளர்த்தவர் நல்லை ஆதீன முதல்வர் நல்லைக் குருமணி அவர்கள்;

[illegible] இந்தியா, மலேசியா; சிங்கப்பூர் முதலானநாடுகளிலும் சைவத் தமிழ் வேரூன்ற - மணம் வீசி நிற்க அரும்பாடு பட்டவர் ஸ்வாமிகள் இராமாயணம் மகாபாரதம், திருவிளையாடற் புராணம், கந்தபுராணம், பெரியபுராணம் முதலியவற்றினை தேனினும் இனிய தீந்தமிழிலே பாமரரும் படித்தோரும் புரியக் கூடிய முறையில் இசையோடு கலந்து இன்னமுதாகக்கூறி விளங்கப்படுத்தும் ஆற்றல் இனி யாருக்கு வரும்?

"என் கடன் பணி செய்து கிடப்பதே" என்று சிவத்தொண்டுக்கே தம் வாழ்வை அர்ப்பணித்தவர் ஸ்வாமிகள். அவரது நாமம் நின்று நிலை பெற்று விளங்க - இன்று - கொலுவிருக்கும் எமது இரண்டாவது குருமகா சந்நிதானம் நாளும் பொழுதும் அரும்பாடு பட்டு வருகிறார்; இக்கட்டான காலகட்டத்தில் தம்மையே தஞ்சமென வந்தடைந்த மக்களுக்கு இருக்க இடமும் உண்ண உணவும் கொடுத்து ஆதரித்தது தமிழ் நெஞ்சங்கள் மறக்கமுடியாதது;

"மக்கள்சேவையே மகேசன் சேவையென" வாழ்ந்து மற்றவர்களுக்காகவேபணியாற்றி வருபவர் ஸ்வாமிகள்:

வேதநெறி தழைத்தோங்க மிகு சைவத்துறை விளங்க மறைந்த ஸ்வாமிகள் விட்டுச் சென்ற பணியை இன்னமும் தொடர்ந்து பல சேவைகளைச் செய்துவரும் நல்லை ஆதீனம் மென்மேலும் சிறப்புற்று விளங்க நல்லைக் குருமணியின் ஆசி இருப்பதாக! ★

### இராசையா ஸ்ரீதரன்

## வாசகர் திருமுகம்

### நிரந்தரபணிமனை

கொடிகாமம் இ. போ. ச. பஸ் நிலையத்தில் ரைம் கீப்பர் தங்கியிருந்துகருமமாற்ற நிலையான இடம் தற்பொழுது இல்லை. இதனால் பிரயாணிகள் பஸ் விபரங்களை அறிய அவரைத்தேடி அலைய வேண்டியுள்ளது:

நாற்றிசையிலிருந்தும் பஸ் போக்குவரத்துச்செய்யும் கேந்திர ஸ்தானம் இந்தப்பஸ் நிலையம். இங்குயாழ்ப்பாணம் சாவகச்சேரி ஆகியவற்றைப் போல ரைம்கீப்பருக்கும் ஒழுங்கான பணிமனை அமைத்துக் கொடுக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்:

—சி. துரை
கொடிகாமம்;

### கடவுள் கருணை எப்பொழுது?

தினம் தினம் வாழ்க்கைச் செலவு ஏறிச் செல்கிறது. இந்த நிலையில் ஓய்வூதியக்காரர் பாடு பெரும் திண்டாட்டமாக இருக்கின்றது:

வேலையில் இருப்பவர்களுக்கு அரசு பல சலுகைகளைச் செய்கின்றது:

ஓய்வூதியக்காரர்களுக்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு 260/ ரூபா கொடுப்பதாகக் கூறியிருந்தார்கள். இந்த 260 ரூபா அலவன்ஸ் வழங்க முடிவு எடுக்கப்படவில்லை என்று நிர்வாகத்துறை அமைச்சர் நாடாளுமன்றத்தில் தெரிவித்திருக்கின்றார்:

ஆனால் அடுத்த மாதம்வரையில் ஜனசக்தித்திட்டத்துக்கான நிதி ஒதுக்கப் போகின்றார்கள். இத்திட்டத்தின் கீழ் வறியவர்களுக்கும் வருமானம் குறைந்தவர்களுக்கும் 2500 ரூபா மாதாந்தம் கொடுக்கப் போகின்றார்கள்:

வயது முதிர்ந்த நிலையில் நோயாளிகளாக வாழ்ந்து கொண்டிருக்கும் ஓய்வூதியக்காரர்களுக்கு கடவுள் எப்போது கருணை காட்டுவார்?

ஓர் ஓய்வூதியக்காரர்,
கந்தர் மடம்.

## நிதி ஒதுக்கீடு

மன்னார், ஆக; 23

மன்னார் மாவட்டத்தில் பல அத்தியாவசிய அபிவிருத்திப் பணிகளுக்காக வன்னி மாவட்ட ஈ.பி.ஆர்.எல்.எவ் நாடாளுமன்ற உறுப்பினர் திரு; அன்ரன் இம்மனுவல் சில்வா 18 லட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளார்;

கல்வி, சுகாதாரம், போக்குவரத்து, சுயவேலைவாய்ப்புத திட்டம், விளையாட்டு போன்ற துறைகளுக்கே இந்த நிதி பயன்படுத்தப்படவிருக்கின்றது. (ச- ரி)

## பாதுகாப்புதீவிரம்

யாழ்ப்பாணம், ஆக: 23

சிறைச்சாலைகள் மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டு விடுவிக்கப்படலாம் என்ற தகவலை அடுத்து சகல சிறைச்சாலைகளிலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

மஹர, வெலிகடை, தங்காலை, போகாம்பர, நீர்கொழும்பு உட்படசகலசிறைச்சாலைகளுக்கும் தற்போது இராணுவ பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. (இ- 21)

## கண்டதும் கேட்டதும்

பல் நோயாளி ஒருவர் கடந்த வாரம் யாழ்: மாவட்டத்தில் உள்ள வைத்தியசாலை ஒன்றுக்குச் சிகிச்சைக்கு வந்திருந்தார்;

வழமைபோல் விறைக்க ஊசிபோடப்பட்டு பல் பிடுங்கப்பட்டது; பல் பிடுங்கிய பின் முரசில் தையல் ஒன்றும் போடப்பட்டது:

நோயாளி வீடு திரும்பினார். என்ன ஆச்சரியம்! விறைப்பு நீங்கியும் அவரின் ஒரு பக்க வாய் அசைய மறுத்து விட்டது!!

முரசில் தையல் போட்ட டாக்டர் உள்வாய்க்கும் சேர்த்துப் போட்டுவிட்டிருந்தது தெரியவந்தது.

உள்வாயுடன் சேர்த்துப் போடப்பட்ட தையலை அவிழ்க்க நோயாளி உடனடியாக மீண்டும் வைத்திய சாலைக்குத் திரும்ப வேண்டிய நிலை ஏற்பட்டது.


பாவம் நோயாளர்களே;

—செய்திலோலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலிவு விலையில் அறிமுகம்!
CHILTON TRIP SWITCH
மின்பொறியியலில் புகழ் மிக்க
OTTERMILL CHILTON LTD
ஸ்தாபனத்தாரின் தயாரிப்பு
சுந்தர்சன்
சந்தை முன், மானிப்பாய்.
(C/3121)

டியூரோல்®
டியூரோலில் அடங்கியுள்ள இரும்புச் சத்து, உடலில் இரத்த விருத்தியை உண்டுபண்ணி இரத்த சோகை நோயின் அறிகுறிகளான சோர்வு, பலவீனம், மந்தம் என்பனவற்றை இல்லாமற் செய்து ஆரோக்கியமான வாழ்விற்குத் தேவையான ஊட்டச்சத்துக்களை வழங்குகிறது.




'செரி' சுவை கொண்ட, வளர்ந்தோருக்கான டியூரோல்®
ஆப்பிள் சுவை கொண்ட பிள்ளைகளுக்கான டியூரோல்®

தினமும் டியூரோல்® அருந்துங்கள்.
அது சுறுசுறுப்பானவர்களின் பானம்.
Pfizer
® ஃபைசர் கூட்டுத்தாபனத்தின் வர்த்தக அடையாளம்.
Grant BJK&E PFL 1157

# பல்துறைகளின் வளர்ச்சிக்கு சமஸ்கிருதம் அடித்தளம்

## நூல் வெளியீட்டில் உரை

யாழ்ப்பாணம், ஆக. 23

எமது மக்களின் பல்துறை வளர்ச்சிக்கும், எம் பண்பாட்டு பாரம்பரிய சூழ்நிலைக்கும் சமஸ்கிருதமொழி அடித்தளமாக அமைந்து உதவியது.

யாழ்-பல்கலைக்கழக கைலாசபதி கலை அரங்கில் திங்கள் மாலை இடம் பெற்ற 'சமஸ்கிருத இலக்கியச் சிந்தனைகள்' என்னும் நூல் வெளியீட்டு விழாவில் கலந்து ஆய்வுரை நிகழ்த்துகையில் யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத் துறைத்தலைவர் கலாநிதி ப. கோபாலகிருஷ்ணன் மேற்கண்டவாறு கூறினார்.

பல்கலைக்கழக சமஸ்கிருதத் துறை தலைவர் பேராசிரியர் வி. சிவசாமியால் எழுதப்பட்டு இந்து நாகரிகத்துறை பேராசிரியர் கா. கைலாசநாதக்குருக்களின் அறுபதாம் ஆண்டு நிறைவையொட்டி இந்நூல் வெளியிடப்பட்டது.

வரலாற்றுத்துறை பேராசிரியர் சி. பத்மநாதன் தலைமையில் நடந்த இவ்விழாவை பல்கலைக்கழக உப வேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தார்.

கலாநிதி கோபாலகிருஷ்ணன் மேலும் பேசுகையில்,

தெற்குப் பல்கலைக்கழகங்களில் சமஸ்கிருத மொழி இலக்கிய மொழியாகவே இருந்தது. ஆனால் இங்கு சமஸ்கிருத மொழி பல்துறை விருத்திக்கும் உதவியாக உள்ளது. சமஸ்கிருத மொழி ஒருதுறையுடன் நிற்காது பல்வேறுபட்ட துறைகளில் ஏற்படும் முற்னேற்றங்களுக்கு உதவியாக உள்ளது. இன்று வெளியாகும் நூல் சமுதாயத்துக்கும் பல்வேறுபட்ட ஆய்வுகளுக்கும் உதவும் வகையில் அமைந்துள்ளது' என்றார்.

கலைப்பீடாதிபதி என். பாலகிருஷ்ணன் பேசுகையில் தமிழ் நாட்டுக் கலாசாரங்களில் எமக்குத் தேவையானவற்றை தேட சமஸ்கிருதமொழி உதவுகிறது என்றார்.

பல்கலைக்கழக நூலகர் சி. முருகவேள் பேசுகையில், பல்கலைக்கழகத்தில் தமிழ்த் துறைக்கு உள்ள அதே அளவு வசதிகள் சமஸ்கிருதத்துறைக்கும் வழங்கப்படவேண்டும். என்றார்.

உபவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா பேசுகையில் இன்று மாணவர்களிடையே குருபக்தி குறைந்து வருகிறது: இது கவலை தரும் விடயமாகும் என்றார்.

இவ்விழாவில் பேராசிரியர் கா. கைலாசநாதக் குருக்கள் விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் வி. கே. கணேசலிங்கம், விரிவுரையாளர் ப. புஷ்பரத்தினம், கலாநிதி நா. சுப்பிரமணியன் உட்பட பலர் உரையாற்றினார்கள்.

இந்து நாகரிகத்துறை விரிவுரையாளர் மா. வேதநாதன் முதல் பிரதியைப் பெற்றார்.

நுண்கலைத்துறை விரிவுரையாளர் திருமதி நி. நித்தியானந்தன், நடன ஆசிரியை செல்வி கௌசல்யா சிவகுரு ஆகியோர் சிறப்புப் பிரதி பெற்றனர். (இ-3)

மக்கள் முகம்

## வர்த்தக ஊழியர் சங்கம்

யாழ்ப்பாணம், ஆக. 23

சுன்னாகம் வர்த்தக ஊழியர் சங்க நடப்பு வருட நிர்வாகிகள்;

தலைவர்: நா. பேரம்பலம், உபதலைவர்: சோ. சிவசுப்பிரமணியம், செயலாளர்: ஏ. பி. ரகு. உப செயலாளர்: து. சிவானந்தம், பொருளாளர்: தி. மகேஸ்வரன்.

நிர்வாகசபை உறுப்பினர்கள்: கே. யோகநாதன், த. தில்லையம்பலம். பொ. இராஜேஸ்வரன், ச. ஞானசுந்தரம், கே. பிரேமச்சந்திரன், கே. கணேசானந்தன், எஸ். கோபால், த. சிவராசா, எஸ். சியாமளா, வி. ரதி ஆகியோர்.

## நடத்துநர் பொறுப்பாம்

மட்டக்களப்பு, ஆக. 23

பயணிகள் அடையாளக் கார்ட் இன்றிப் பயணம் செய்தால் அதற்கு நடத்துநர்கள் தான் பொறுப்பு என மட்டக்களப்பில் இ. போ. ச, தனியார் பஸ் நடத்துநர்களுக்கு இந்திய படையினர் தெரிவித்துள்ளனர். (இ-21)



University of Jaffna.

**Tender Notice**

**Rehabilitation of Sports Facilities - Changing Room**

Sealed tenders are invited for the above work from contractors registered with University of Jaffna for civil works for Rs. 500,000/00.

Tender forms can be obtained from the works Engineer, University of Jaffna from 29. 8. 89 to 31. 8. 89 on producing the receipt from Bursar, University of Jaffna for the payment of follwing tender fee:


1. Refundable — Rs. 1000/-
2. Non - refundable — Rs. 200/-

The perfected tender forms should be sent to reach the works Engineer, University of Jaffna on or before 13. 9. 89 at 10.00 a. m.

University of Jaffna reserves the right to reject any tender.

**Actg Registrar,**
University of Jaffna,
Thirunelvely, Jaffna.

(C/3533)



## இலங்கை மின்சார சபை

கீழ்க் குறிப்பிட்ட வேலைகளை வடமாகாணத்துள் ஒப்பந்த அடிப்படையில் வழங்குவதற்கு கேள்விப்பத்திரங்கள் ஒப்பந்தக்காரரிடமிருந்து ஏற்றுக்கொள்ளப்படும்.

| | அளவு | | |
|---|---|---|---|
| 1. மின்கம்ப கிடங்கு வெட்டல் | — 2½' | 2' | 5' |
| | — 2½' | 2' | 5½' |
| 2. மின்கம்ப ஸ்ரேகிடங்கு வெட்டல் | — 2½' | 2' | 5' |
| | — 2½' | 2' | 5½' |

கொங்கிறீற் தூண்கள்

| | |
|---|---|
| 3. மின்கம்பம் நிறுத்துதல் | — 32' |
| | 29' 6'' |
| | 27' |
| | 25' |

மரத் தூண்கள்

32'
29' 6''
25'

4. ஸ்ரே கட்டி பிணைத்தல்.

★ 5 (A A.C.) மின் கடத்திகொண்டு தாளமுக்க(L.T) மின்மார்க்கம் அமைத்தல், அத்துடன்
   1. ''டீ பிராக்கற்'' உடன் மின்காவலி பூட்டுதல்
   2. புவியிர்ப்பு கடத்தி இழுத்தல்.
   3. சகல மின்கம்பங்கள் அமையும் இடத்தில் புவியிர்ப்புக்குரிய இரும்புக்குழாய் அடித்தல் அத்துடன் அதனை புவியிர்ப்புக் கடத்தியுடன் தொடர்புபடுத்தல்.

✶ **தேவைப்படும் உபகரணங்கள் சபையினால் வழங்கப்படும்.**

கேள்விப்பத்திரங்கள் பெறவிரும்பும் ஒப்பந்தக்காரர்கள் ரூபா 250/- பெறுமதியுடைய (200/- மீளளிப்புச் செய்யப்படும்) வைப்புப் பணத்திற்கான தபால் அல்லது வங்கிக் காசுக்கட்டளையை இலங்கை மின்சார சபை, கொழும்பு என்ற பெயரில் எடுத்து இந்த அலுவலகத்தில் சமர்ப்பித்து 04 - 09 - 1989 ஆம் திகதி வரை பெற்றுக்கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப்பத்திரங்கள் சில் இடப்பட்டு 1989 - 09 - 06 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு முன்னர் எனது அலுவலகத்தில் உள்ள கேள்விப்பத்திரப் பெட்டியில் இடப்படவேண்டும். மேலே குறிப்பிட்ட திகதியின் பின் கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. 1989 - 09 - 06 ஆம் திகதி காலை 11.00 மணிக்கு கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும்.

தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்கள் கடித மூலம் 15. 09. 1989 ஆம் திகதிக்கு முன்னர் அறியத்தரப்படுவார்கள். அவர்கள் குறிப்பிட்ட தொகையான மீளளிப்புச் செய்யப்படும் வைப்புப் பணத்தை சபைக்குச் செலுத்த வேண்டும்.

இது தொடர்பாக மேலதிக விபரம்தேவைப்படின் அலுவலக நாட்களில் காலை 9.00 மணி தொடக்கம் மாலை 3.00 மணிவரையில் எனது அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

பிரதி பொதுமுகாமையாளர்,
(வடமாகாணம்)

பிரதி பொது முகாமையாளர் அலுவலகம்,
இலங்கை மின்சாரசபை,
இல. 52 (120), அம்பலவாணர் வீதி,
அத்தியடி, யாழ்ப்பாணம். (சி/3532)

## கம்பியூட்டர் வகுப்புக்கள்

புதிய வகுப்புக்கள் ஆரம்பம்

DATA PROCESSING AND COMPUTOR PROGRAMMING IN BASIC LANGUAGE
LOTUS 123 and WORD PROCESSING
ஆரம்பம் 28 . 8 . 1989
NORTH CEYLON TECHNICAL INSTITUTE
14, St PETERS LANE, JAFFNA. (C/3531)

## 45 ஆம் நாள் நினைவஞ்சலி

தாயின் மடியில்:
18- 11- 1951

ஆண்டவன் அடியில்:
10 07- 1989



### அமரர் திரு. கனகசிங்கம் கந்தசாமி
(வவுனியா நீதிமன்ற ஊழியர்)

வாடா மலரே அப்பா! நீங்கள் எம்மை
இங்கு வாடவிட்டுச் சென்றதேனப்பா?
நிலை தடுமாறிச் சென்றதேனப்பா?
அப்பா என்று அன்போடு அழைப்பதற்கு இனி
எமக்கு இருக்கின்ற தெய்வமேதப்பா?
சிந்தித்துப் பார்க்க முடியவில்லையே அப்பா?
கோடிகள் குவிந்தாலும் கோபுரங்கள்
உயர்ந்தாலும் உங்களை இழந்த துயர்
தாழவில்லையே அப்பா!

23-08-89 இன்று நடைபெறும் கிரியைகளில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம்.

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

என்றும் உங்கள் பிரிவால் துயருறும்:
அன்பு அன்னை, மனைவி, பிள்ளைகள் கவிதா, நிர்மலன், நிசாந்தன், நிரஞ்சன், சகோதரர்கள், மாமன், மாமி, மைத்துனர்கள், உற்றார், பெரியோர்கள், நண்பர்கள்.
வவுனியா (1686)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு:
12- 01- 1918

உதிர்வு:
23- 08- 1988



### மனுவல்பிள்ளை றிச்சேட் லூயிஸ்
(இளைப்பாறிய களஞ்சியப் பொறுப்பாளர்
உணவுக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்)

ஆண்டொன்று சென்றாலும்
அன்புருவத்தை நாம் மறவோம்
ஈண்டு உம்மை நினைத்தே
இவ்வுலகில் வாழ்கின்றோம்.

எமது அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள், மருமகன்,
சகோதரர்கள். பேரப்பிள்ளைகள்.

219, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். (11743)



## ஐந்தாவது பிறந்தநாள் வாழ்த்து

### செல்வன். யே. அன்ரோ சுதர்சன்
(அருண்)
23. 08. 1989

யாழ்ப்பாணம் பாஷையூரைச் சேர்ந்த ஜேர்மனியில் வசிக்கும் யேசுதாசன் — கொலஸ்ரிக்கா தம்பதிகளின் செல்வப் புதல்வன் அன்ரோ சுதர்சன் (அருண்) தனது ஐந்தாவது பிறந்தநாளை ஜேர்மனியில் தனது அப்பா, அம்மாவுடன் இன்று குதூகலமாகக் கொண்டாடுகிறார்.

இவரை பாஷையூரில் இருக்கும் ஞானப் பெற்றோர், விக்ரர் மாமா, லீலா மம்மி, மொயிரு மச்சி, றனி அத்தான், கட்ட மாமா, கிறிஸ்ரீன் அத்தை, நேரியஸ் அத்தான், தீபா மச்சி மற்றும் சுதந்திரா, பீறிற்ரோ, றெக்சலா, டேனேசி ஆகியோர் பலகலையும் கற்று பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.
(1588)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஸாமில் ஆளுநர் ஆட்சி; காங்கிரஸ் எம்பி வலியுறுத்து!

அஸாம் மாநிலத்தில் ஆளுநர் ஆட்சி கொண்டுவரப்பட வேண்டும் என்று மத்திய அரசுக்கு வேண்டுகோள் விடப்பட்டுள்ளது.

இந்திரா காங்கிரஸ் எம்.பி.யும் முன்னாள் வெளியுறவு இணைஅமைச்சருமான பெபின் பால்தாஸ் இந்த வேண்டுகோளை விடுத்தார்.

அஸாம் மாநிலத்தில் சட்டம் ஒழுங்கு கெட்டுவிட்டது, பழங்குடியினரை மாநில அரசு பாதுகாப்பதாக இல்லை. ஆகவே மாநிலஅரசைக் கலைத்து ஆளுநர் ஆட்சி கொண்டு வரப்படவேண்டும் என்று அவர் கேட்டிருக்கிறார். (எ)

## பிறந்தநாள் வாழ்த்து



ஸ ச. பாஸ்கரன் ஸ

ச. பாஸ்கரன் தனது 30ஆவது பிறந்தநாளை கொழும்பில் தனது நண்பர்களுடன் 22-08-89இல் குதூகலமாகக் கொண்டாடினர்:

● இரண்டாம் கட்டப் பேச்சின் இறுதியில்

# இந்திய-பாக் எல்லையை பார்வையிட பிரதமர் பெனஸிர் பூட்டோ முடிவு!

### சியாச் சென் தகராறு தொடர்பாக புதிய நிலை

இஸ்லாமபாத், ஆக 22

இந்திய - பாகிஸ்தான் எல்லைப்புறப் பனிப்பிரதேசமான சியாச்சென்னுக்கு பாகிஸ்தான் பிரதமர் பெனஸிர் பூட்டோ விஜயம் செய்யவிருக்கிறார்.

இந்த எல்லைத் தகராறு குறித்து ஸ்லாமபாத்தில் கடந்த வெள்ளி, சனி ஆகிய தினங்களில் இந்திய - பாகிஸ்தான் இராணுவ அதிகாரிகளுக்கிடையேயான இரண்டாம் கட்ட சுற்றுப் பேச்சுக்கள் நடந்தன.

அதைத் தொடர்ந்தே சியாச்சென் பனிப்பிரதேசத்தில் உள்ள பாகிஸ்தான் இராணுவ நிலைகளுக்கு விஜயம் செய்ய திருமதி பெனஸிர் பூட்டோ தீர்மானித்துள்ளார்.

அங்குள்ள பாக். துருப்புக்கள் மத்தியிலும் அவர் உரையாற்றுவார் என்று பாகிஸ்தான் நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டது.

அடுத்த கட்டப்பேச்சுக்கள் இருநாடுகளுக்கும் இடையே எப்போது நடைபெறும் என்பது தெரிவிக்கப்படவில்லை.

இப்பனிப் பிரதேசத்தில் இருதரப்பிலும் குவிக்கப்பட்டுள்ள துருப்புக்களை பரஸ்பரம் விலக்கிக் கொள்வது சம்பந்தமாகவே இப்பேச்சுக்கள் நடைபெறுகின்றன. (எ)

● தமிழ் நாட்டில்

## அணுக்கசிவு ஏற்பட்டால் என்ன செய்யவேண்டும்?

### கல்பாக்கத்தில் நடந்த பரீட்சார்த்தம்

சென்னை, ஆக. 22

தமிழ் நாட்டில் உள்ள கல்பாக்கம் அணு உலையில் விபத்து ஏற்பட்டால் எப்படித் தப்புவது? என்பது பற்றிப் பரீட்சார்த்த செய்கைமுறை ஒன்று கடந்த சனிக்கிழமை கல்பாக்கத்தில் நடத்தப்பட்டது.

அணு உலையில் விபத்துக் காரணமாக அணுக்கசிவு ஏற்படும்போது அயற்கிராமங்களில் வசிக்கும் மக்களின் பாதுகாப்புக்கருதி எடுக்கவேண்டிய அவசியநடவடிக்கைகள் பற்றி அப்போது அதிகாரிகளுக்கு விவரிக்கப்பட்டன. (எ)

● ஆகஸ்ட் 30 இல் நடக்கவிருக்கும்

# எதிர்க்கட்சி 'பந்த்'தை முறியடிக்க அ.தி.மு.க கூட்டணி தயார் நிலையில்!

### ஜெயலலிதா அறிவிப்பு

சென்னை, ஆக 22

எதிர்க்கட்சிகள் இம்மாதம் 30 ஆம் திகதி இந்தியா முழுவதும் அரசு எதிர்ப்புப் 'பந்த்' ஒன்றை நடத்தவிருப்பது தெரிந்ததே.

தமிழ் நாட்டில் இதனை முறியடிக்க அ. தி. மு. க. தலைமையிலான ஆறு கட்சிக் கூட்டணி தயார் நிலையில் இருப்பதாக அ. தி. மு. க. பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதா அறிவித்திருக்கிறார்.

அ. தி. மு. க. பொதுச் சபை கூட்ட முடிவில் செல்வி ஜெயலலிதா செய்தியாளர் மத்தியில் பேசுகையில் இதனைத் தெரிவித்தார்.

ஜெயலலிதா - ஜானகி அணிகள் ஒன்றாக இணைந்த பின்னர் நடந்த முதலாவது பொதுச் சபைக் கூட்டம் இதுவாகும்.

செல்வி ஜெயலலிதா மேலும் சொன்னதாவது;

அரசு எதிர்ப்புப் பந்த்தை முறியடிக்கும் நடவடிக்கைகளுக்கு கருணாநிதி அரசு தகுந்த பாதுகாப்பு வழங்க வேண்டும்;

கருணாநிதி இதில் தவறுவாராஞல் மத்திய அரசைத் தலையிடும்படி நாம் கோருவோம்.

**'ஆகஸ்ட் 28 இல் பேசுவேன்'**

வருகிற 28 ஆம் திகதிசென்னையில் பொதுக் கூட்டம் ஒன்று நடைபெறும். அதில் நான் பேசுவேன். தி. மு. க. அரசின் நிலையை கண்டிக்கவே இக்கூட்டம் நடத்தப்படுகிறது.

அ.தி மு.க. வில் ஏற்பட்ட பிளவுகாரணமாகவேதி.மு.க. ஆட்சிக்கு வந்தது. அ. தி. மு. க. வில் இன்னமும் பிளவை ஏற்படுத்தும் முயற்சியிலேயே தி. மு. க. ஈடுபட்டு வருகிறது.

அச்சாணி இன்றி தி.மு க. அரசு வண்டி ஓடுகிறது. விரைவில் அந்த வண்டி குடைசாய்ந்து விடும். மத்திய ஆட்சியை இந்திரா காங்கிரஸே பிடிக்கும்.

**எம் ஜி ஆர். சிலைகள்**

சென்னை மாநகரிலும் மாவட்டங்களிலும் முக்கிய இடங்களில் எம். ஜி. ஆர். சிலைகள் நிறுவப்படும்.

நாடாளுமன்றத் தேர்தலுடன் தமிழ் நாடு சட்டசபைத் தேர்தலும் நடத்தப்படவிருக்கிறது.

அ.தி.மு.க. தொண்டர்கள் இதற்குத் தயாராக இருக்க வேண்டும்.

இப்படி செல்வி ஜெயலலிதா சொன்னர். (எ)

✯ தடை விதிக்கப்பட்ட

## இந்திய வீரர்களின் மேன்முறையீடு; முடிவு எடுப்பது ஒத்திவைப்பு!

பம்பாய், ஆக 21

ஓராண்டு காலம் விளையாட முடியாது தடை விதிக்கப்பட்ட ஆறு பிரபல இந்தியக் கிரிக்கெட் வீரர்களின் மேன் முறையீடு குறித்து முடிவு செய்வதை இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை பின் போட்டுள்ளது.

அனுமதி பெருமல் அமெரிக்காவிலும் கனடாவிலும் விளையாடியதற்காக வெங்சார்க்கர், கபில் தேவ், கிரான் மோரே, ரவி சாஸ்திரி, அஸாருதீன், அருண்லால் ஆகியவர்கள் ஓராண்டு காலம் விளையாடக் கூடாது என்று இந்தியக் கிரிக்கெட் சபை தடை உத்தரவு பிறப்பித்தது தெரிந்ததே.

இதை எதிர்த்து ஆறு வீரர்களும் சபையின் செயற்குழுவிற்கு மேன் முறையீடு செய்துள்ளனர். (எ)

### ராஜீவ் மீது கண்டனம்

இந்திரா காந்தியைக் கொலை செய்தவர்களுடன் தெலுங்கு தேசம் கட்சி கூட்டுச் சேர்ந்துள்ளது என்று கூறியதை பிரதமர் ராஜீவ் காந்தி வாபஸ் வாங்குவதுடன் பகிரங்க மன்னிப்புக் கோரவும் வேண்டும்.

ஜனதா தள் தலைவர் வி.பி சிங் மேற்கண்டவாறு செய்தியாளர் மத்தியில் பேசுகையில் குறிப்பிட்டார் (எ)

### புராதன கிராமம்

4 ஆயிரத்து 200 ஆண்டுகளுக்கு முன்னர் இருந்த கிராமம் ஒன்றை ஜெருசலம் அருகில் இஸ்ரேலிய புதைபொருள் ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்தனர்.

ஜெருசலம் அருகே அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட இரண்டாவது புராதன கிராமம் இதுவாகும்.

இதற்கு முன்னர் கண்டுபிடிக்கப்பட்ட நகரம் டேவிட் என்ற பெயரில் அமைந்தது.


## UNITED KINGDOM

Attention ! Businessmen

An overseas firm can apply to post one employee to U K for the purpose of representing their interests here. The employee will then be able to take responsibility for all aspects of the firm's activities in Britain. This gives the overseas company an excellent opportunity to establish a foothold in U K before the advent of the single European Market in 1992

It can be also be of economic benefit to the company as it will no longer be necessary to pay out frequent air fares to send representative on business trips. It will enable the company to offer a more efficient service to U K and European clients by having a locally - based representative on hand to deal with all inquiries.

Please write with full details of your company to:

**P. V. MURTHI**
**253 2/1, Galle Road.**
**COLOMBO — 4**


## இவர்கள் ஆவணியில் உதித்தவர்கள்



**யாழினி-ஜனனி-பாலசத்தியன்**

ஆகஸ்டில் மலர்ந்த ஒரு குடும்பப் பூக்களிவை. ஆதலினுல் நீங்களின்று அருகருகே காண்கின்றீர். இளையவன் பாலசத்தியனுக்கு இன்றுதான் இருவயது ஆரம்பம்; ஆனுலும் மூத்த சகோதரிகள் யாழினி, ஜனனி ஆகியோர்க்கு முடிந்திட்ட ஆங்கில ஆறு அன்று முறையே ஆறும் நான்கும் வயதாய் தொடங்கின. ஜனனதினத்தை நினைந்து இன்று மகிழும் இந்தச் செல்வங்கள் மூவரும் தொடர்ந்து வரும் ஆண்டுகள் அனைத்திலுமே தோள்களில் கரங்கள் கோர்த்து நின்று துடிப்போடு துள்ளித்திரிந்து நிற்க அப்பா, அம்மா மற்றும் அனைத்து உறவினரும் எப்போதும் தங்கள் இனிய வாழ்த்தை தெரிவிப்பர்:

நாவலடி ஒழுங்கை,
திருநெல்வேலி மேற்கு,
யாழ்ப்பாணம்.

ஐயனர்கோவிலடி,
சுருவில்,
ஊர்காவற்றுறை.

(1592)


## Diploma In Computer Programming & Data Processing

| | BASIC | d BASE III+ |
|---|---|---|
| Duration | 4 Months | 2 Months |
| Days | Tue, Fri | Sat, Sun |
| Monthly Fees | 300/- | 600/- |
| Commencement | 25 - 8 - 89 | 26 - 8 - 89 |

✶ Practicals on IBM (Compatibles)
✶ Lectures by Members of I. D. P. M. (London)
✶ தமிழிலும் விளக்கங்கள் தரப்படும்.
✶ Valuable Certificate

C.I M.A. I.D.P.M I.A.B,
Short Hand Typing நடைபெறுகின்றன.

மேலும் விபரங்களுக்கு:

**SCHOOL OF BUSINESS ADMINISTRATION**
(LEADERS IN COMPUTER EDUCATION)
16, 3rd Cross Street,
(O. L. R. தேவாலயத்துக்கு மேற்குப்பக்கம்)
Jaffna.

(இ/3537)

## வெற்றிடங்கள்

கண்ணாடி தொழிற்சாலையில் வேலை செய்வதற்கு அனுபவமுள்ள ★ புளோவர்ஸ் (BLOWERS) ★ ஹெல்ப்பர்ஸ் (HELPERS) ★ பபிளேர்ஸ் (BUBBLERS) தேவை. அனுபவத்துக்குத் தகுந்த ஊதியம் வழங்கப்படும். தங்குமிட வசதியும் செய்து கொடுக்கப்படும். இத்துடன் வேலை பயில்பவர்களுக்கும் வெற்றிடங்கள் உண்டு.

நேரில் சமுகமளிக்கவும்:

**த. பெனின்சுலா குரூப்**
மகேந்திரா கண்ணுடி தொழிற்சாலை
அரஸ்கோ கட்டடம்
**163, கண்டி வீதி,**
அரியாலை

(C/3542)

வெளிநாட்டு
## பிரயாண ஒழுங்குகள்

● ஜெர்மனி (GERMANY)
(16 வயதிற்கு உட்பட்டவர்களுக்கு உடனடி பிரயாண ஏற்பாடு)
● சுவிஸ்லாந்து (SWISS)
● இத்தாலி (ITALY)
● பிரான்ஸ் (FRANCE)

ஆகிய நாடுகளுக்கு பிரயாண ஏற்பாடுகள் துரிதகதியில்செய்து கொடுக்கப்படும்

✶ Pass Port மற்றும் Bond ஆகியவை விரைவில் செய்து கொடுக்கப்படும்.

அத்துடன் ஆங்கில தட்டச்சு English (Typing) போட்டோஸ்ரற் (Photo Stat) கொப்பிகள் உடன் செய்து கொடுக்கப்படும்.

## கமல்ஸ் சேர்வீஸ் & ரேடிங்ஸ்

ரவல் ஏஜன்ட்ஸ் & எயர் ரிக்கட் புக்கிங்ஸ்
**நாகம்மா பில்டிங்ஸ்,**
முதல் மாடி [பஸ்நிலையம் முன்பாக]
**404/1, ஆஸ்பத்திரி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

கீழ்க் கண்ட விலாசத்திலும் தொடர்பு கொள்ளலாம்:
உரிமையாளர்;

N. கனகரட்ணம் [ஐவோம்]
சுமதி ஸ்ரோர்ஸ்
கொக்குவில் மேற்கு,
காந்திஜி வீதி, கொக்குவில்

[இ/3539]


## கேள்வி அறிவித்தல்

### கட்டடங்கள் திணைக்களம்
### வடக்கு - கிழக்கு மாகாண அரசு

மேற்படி அரசினுல் முல்லைத்தீவு அரச சுற்றுலா விடுதி அமைப்பதற்கான கேள்விகள் திருகோணமலை, உள்துறைமுக வீதி, வடக்கு - கிழக்கு மாகாண அரசக் கட்டடங்கள் திணைக்களத் தலைவரினுல் 1989ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 20 ஆம் திகதி புதன்கிழமை வரை ஏற்றுக்கொள்ளப்படும்;

2. ரூபா 1,300,000ற்கு அல்லது மேற்பட்ட தொகைக்குக் கட்டடங்கள் திணைக்களத்தினுல் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களும் அதே அளவு அல்லது அதற்கு மேற்பட்ட தொகைக்குக் கட்டடங்கள் திணைக்களத்தால் வழங்கப்பட்ட பரிசீலிப்புக் கடிதங்களை வைத்திருப்போரும் இக் கேள்விக்குத் தகுதி உடையோராவர்.

3. மேற்படி கேள்வி அறிவித்தல் 1989 செப்டெம்பர் 12 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 15 மணிவரை நிறைவேற்றுப் பொறியியலாளர் கட்டடங்கள் திணைக்களம், முல்லைத்தீவில் ஏற்றுக் கொள்ளப்படும். கேள்வி வைப்புக்குச் சமர்ப்பிக்க வேண்டியவை

மீளளிக்கப்படும் வைப்புப்பணம் — 500/-
மீளளிக்கப்படாத வைப்புப்பணம் — 16,000/-

வைப்புப் பணத்தைப் பணமாக ஏதாவது கச்சேரியில் அல்லது கட்டடங்கள் திணைக்கள உள்துறைமுக வீதி, திருகோணமலையில் வைப்புச் செய்து கொள்ளலாம்.

4. கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சிக்க முடியும். அத்துடன் ஏதாவது விபரங்களை நிறைவேற்றுப் பொறியியலாளர், கட்டடங்கள் திணைக்களம், முல்லைத்தீவில் அலுவலக நேரங்களில பெற்றுக் கொள்ளலாம்.

5. கேள்விதாரர் தனியார் கம்பனிகளாயின் அவைதம் தற்போதைய பணிப்பாளர்களினதும், பங்குதாரர்களினதும் பெயர்களைக் குறிப்பிட வேண்டும்.

— சி: சுப்பிரமணியம்
பணிப்பாளர்,
கட்டடங்கள் திணைக்களம்,
திருகோணமலை.

(சி/3237)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்மிடம் வர்ண நிழற்படப்பிரதிகள
பிரதியாக்கம் செய்பவர்களுக்கு
வர்ண நிழற்படச் சுருள்கள
போட்டோ அல்பங்கள் இலவசம
மேலதிக விபரங்களுக்கு
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
111, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

உதயன்

23 - 08 - 1989 புதன்கிழமை

அன்புடன் அழைக்கின்றது
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
★ தரமான வர்ண நிழற்படப் பிரதி ஒன்று 5/-
நெக்கட்டிவ் [Processing] செய்தல் இலவசம்
★ விற்பனை வர்ண நிழற்படச் சுருள்கள்
Kodak Fuji Konic.
Tudor Fort B/W
பெற்றுக் கொள்ள நாடுங்கள்.

## சுப்பர்மடம்.....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

...பாட்டு எரிக்கப்பட்டுள்ளன. மேலும் அல்வாய் வடக்கு நாவலடியைச் சேர்ந்த கந்தசாசன் என்பவரின் வீடும், நவரத்தினம் ஸ்ரோஸ், திரு. நவரத்தினத்தின் வீடு என்பனவும் முற்றாக எரிந்து சேதமடைந்துள்ளன.

இச் சம்பவத்தில் மேலும் பலர் படுகாயமுற்றுள்ளனர்: திருமதி சுப்பிரமணியம் மணிமேகலை (வயது 62), திரு. மு. சிங்காரவேல் (வயது 28) செல்வி மகேந்திரன் சுகிதா (வயது 26), திரு. கி. நவரத்தினம் (வயது 50), கதிரிப்பிள்ளை இராமசாமி (வயது 62) ஆகியோர் காயமடைந்தோரில் சிலர் ஆகும். (உ-118)

★ அந்தியகால சேவையில் முதிர்ச்சி பெற்றவர்களது நவீன ஸ்தாபனம்!
★ குடாநாட்டில் சகல கிராமங்களுக்கும் எமது சேவை விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது.
பிறைற் ஹவுஸ்
(புனித யாகப்பர் ஆலய அருகில்)
210 பிரதான வீதி
யாழ்ப்பாணம்.
(C/3543)

## உறியடித்திருவிழா

காலம்:- 24 - 08 - 89 (வியாழக்கிழமை).
பிற்பகல்:- 2.00 மணி தொடக்கம் 5.00 மணி வரை திருவிழாவும் விசேஷ நிகழ்ச்சிகளும் நடைபெறும்.

நிதி, அன்பளிப்பு வழங்குவோர் தேவஸ்தான நிர்வாகத்திடம் ஒப்படைக்கும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

அனைவரும் வருவீர்! திருமால் அருள் பெறுவீர்!

தேவஸ்தான நிர்வாகம்.

ஏழாலை புவனேஸ்வரி அம்பாள்,
தேவஸ்தானம்,
ஏழாலை.

(சி/3536)

## 31 ம் நாள் நினைவஞ்சலி



**மகாலிங்கம் மகேஸ்வரன்**
யாழ் மத்திய கல்லூரி வர்த்தக மாணவன்

பிறப்பு: 02.06.69 — இறப்பு: 23.07.89

மத்திய கல்லூரி மாணவ மகேசனே
மாணவர் என்றும் நெகிழ்வுட நும்மை
மறந்தோம் எனநீர் துறந்தீர் எம்மை
சிறந்தோர் வாழ்வுச் சிறப்பே ஐயா

இராசா என்றும் அன்னை அழைத்திட
பேசாது இருப்பீர் எனநாம் எண்ணவில்லை;
மாசம் பலவும் மண்ணில் போயினும்
நேசம் நிறைந்த நிர்மலா எங்குற்றீர்;

பச்சைப் பாலனெனப் படிப்பதற்கு நாமனுப்ப
இச்சையுடன் யாருமக்கு இன்சொல் இசைத்தனர்;
இச்செகம் நும்மை இராசா என அழைக்க
தற்சமயம் எங்குற்றீர் எம்ஐயா.

நீர்வேலி; பெற்றோர்,

# பகுதி நேர மின்சாரமும் துண்டிப்பு?

யாழ்ப்பாணம் ஆகஸ்ட் 23

யாழ் மாவட்டத்தில் முக்கிய சில நிலையங்களுக்கு விசேடமாக வழங்கப்பட்டு வரும் மின்விநியோகத்தை சிலர் துஷ்பிரயோகம் செய்கிறார்கள். இதனால் இந்த மின்விநியோகத்தை முற்றாகத் துண்டிக்கும் அபாயம் ஏற்படலாம்:

— இலங்கை மின்சாரசபை அதிகாரி ஒருவர் இந்த எச்சரிக்கையை விடுத்தார்.

கடந்த ஜூலை 13 ஆம் திகதி நீர் மின் விநியோகத் தடை ஏற்பட்டதிலிருந்து இலங்கை மின்சார சபையின் யாழ் பிரிவு மிகுந்த சிரமத்தின் மத்தியில் சுன்னாகத்திலிருந்து உற்பத்தியாகும் மட்டுப்படுத்தப்பட்ட அளவு மின்சாரத்தை யாழ் மாவட்டத்துக்கு விநியோகித்து வருகிறது.

மாவட்டத்தின் சகல பகுதிகளுக்கும் பகலில் ஒரு மணித்தியாலமும், முக்கிய நிலையங்களான பெரியாஸ்பத்திரி, நீர் விநியோகப் பிரிவு, மற்றும்சில அத்தியாவசிய சேவைப்பகுதிகளுக்குபகலில் அல்லது இரவில் அல்லது இருநேரமும் மின்சாரம் வழங்கப்படுகிறது.

சில இடங்களுக்கும் மின்மாற்றி அருகில் இல்லாததால் இடையில் உள்ள இடங்களுக்கும் மின்சாரம் வழங்க வேண்டியிருக்கிறது.

என்ன நேரத்திற்கு மின்சாரம் வழங்கப்படுகிறதோ அதற்குப் புறம்பாக வேறு தேவைகளுக்கு இப்பகுதிகளில் மின்சாரம் பெருமளவில் பாவிக்கப்படுகிறது:

சிலரின் கைங்கரியத்தினால் குறிப்பிட்ட இடத்திற்கு அப்பாலும் மின்விநியோகிக்கப்படுகிறது.

இதனால் நாளுக்கு நாள் பாவிக்கும் மின்சாரத்தின் அளவு அதிகரித்துக்கொண்டே போகிறது. இந்நிலைசீரடையாவிட்டால் — மக்கள் துஷ்பிரயோகத்திற்கு தொடர்ந்தும் இடம் கொடுத்தால் — இந்த மட்டுப்படுத்தப்பட்ட மின்விநியோகத்தையும் துண்டிப்பதைத் தவிர வேறுவழியில்லை.

— இவ்வாறு அந்த அதிகாரி மேலும் சொன்னார். (உ-9)

## ரதோற்சவம்

அளவெட்டி தெற்கு, ஸ்ரீ நாகவரத நாராயணர் ஆலய ரதோற்சவம் நாளை காலை 11 மணிக்கு நடைபெறும்.

## புதுடில்லி......

தாகவும் —

இது குறித்து இருநாடுகளாலும் கூட்டறிக்கை ஒன்று வெளியிடப்படும் என்றும் பரவலாக பேசப்பட்டது.

ஆனால் இப்போது ஜனாதிபதி பிரேமதாஸா புதுடில்லி யோசனைகளில் மேலும் சில புதிய மாறுதல்களைச் செய்ய வேண்டும் என்று வலியுறுத்தி வருவதாகச் செய்திகள் வந்துள்ளன.

புதிய மாறுதல்கள் எப்படியானவை என்ற விபரங்களை இலங்கை அரசு வட்டாரங்கள் வெளியிடவில்லை.

ஆனால் வேறுபாடுகளை அகற்றும் முயற்சியில் இருதரப்பினரும் ஈடுபட்டுள்ளனர் என்றும்—

புதுடில்லியில் முதலில் உருவான யோசனைகள் பின்னர் அவற்றை மீளாய்வு செய்ய ஜனாதிபதி பிரேமதாஸா சமர்ப்பித்த ஆலோசனைகள் அவற்றின் அடிப்படையில் எழுந்த மாற்றங்கள் அந்த மாற்றங்கள் தொடர்பாக ஜனாதிபதி பிரேமதாஸாவின் கருத்து போன்றவற்றை இந்தியா இன்னமும் எதிர்பார்த்துக் கொண்டிருப்பதாகவும் இந்திய தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (உ-எ)

## பயிலுநர்...,

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

இந்த முயற்சியானது தனது தான்தோன்றித் தனமான கபடப் போக்கையே வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ளது. நீண்ட காலமாக தமது நிரந்தர நியமனத்துக்காக காத்திருந்த தொண்டர் ஆசிரியர்களை படுகுழியில் வீழ்த்தும் ஒரு நிகழ்வாகவே இது அமைகிறது. அது மட்டுமல்லாமல் நாட்டின் சீரற்ற அரசியல் காரணங்களைக் காரணங் காட்டி நாடு முழுவதும் உள்ள பாடசாலைகளை மூட உத்தரவு விட்ட ஸ்ரீலங்கா அரசு இந்த ஆசிரியர் நியமனத்திற்கு மட்டும் முண்டியடித்துக்கொண்டு வருவதன் மர்மந்தான் என்ன?

ஆகவே தொண்டர் ஆசிரியர்களே அரசின் இந்த ஆத்திரமூட்டும் நடவடிக்கைக்கு எதிராக ஒன்று திரண்டு ஒருமித்த குரலில் ஒன்றிணைந்து போராடுவோம்! — இவ்வாறு அந்த துண்டுப் பிரசுரத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## களுத்துறை..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

நடத்தினர். அப்போது குண்டு தயாரித்துக்கொண்டிருந்த நபர் ஒருவர் மீது பொலீஸார் சுட்டனர். அந்த இடத்திலேயே அந்த நபர் மரணமானார்;

## ஆஸ்பத்திரி..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

விசாரணை நடத்தப்பட வேண்டும்.

ஆஸ்பத்திரி நிர்வாகத்தில் பாதுகாப்புப் படையினர் தலையிடுவது நிறுத்தப்பட வேண்டும்.

வேலைக்குச் சமுகமளிக்காத காலத்துக்குரிய சம்பளம் வழங்கப்பட வேண்டும்:

இக் கோரிக்கைகள் நிறைவேற்றப்படாவிட்டால் வேலைநிறுத்தம் நாட்டில் உள்ள அனைத்து ஆஸ்பத்திரிகளுக்கும் விஸ்தரிக்கப்படும்.

- இப்படி அறிக்கையில் கூறப்பட்டுள்ளது; (ஓ-எ)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி இராசம்மா முருகேசு

திருமதி இராசம்மா முருகேசு காலமானார். இவர் காரைநகர் களபூமி விளானையைச் சேர்ந்தவரும் யாழ்ப்பாணம் பிரபல வர்த்தகர் S. V. முருகேசுவின் அன்பு மனைவியும், நாகேஸ்வரி (லண்டன்), தங்கராசா [லண்டன்], இராஜேஸ்வரி, நடராஜா, (றகுதாஸ் கொழும்பு), தங்கரத்தினம் (முருகன் அரிசி ஆலை கிளிநொச்சி), பூமணி, குணரத்தினம் (சிற்றி ஏஜென்சி யாழ்ப்பாணம்), சதானந்தன் (லண்டன்), சிவானந்தன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், அம்பலவாணர் (கணக்காளர் லண்டன்), நாகேஸ்வரன் (இலங்கைவங்கி யாழ்ப்பாணம்), உமாதேவன் (ஹட்டன் நஷனல் வங்கி கொழும்பு), சரோஜினி (லண்டன்), பத்மராணி, ராசமலர் ஆகியோரின் அன்பு மாமியாரும், தர்மலா, சஞ்ஜீவன், இளங்கோ, சங்கர் சுரேகா ஆகியோரின் அன்புப் பேத்தியும், காலஞ்சென்ற பொ. வேலுப்பிள்ளை, காலஞ்சென்ற பொ. சதாசிவம், காலஞ்சென்ற சுந்தரம்மா, பொ. கந்தையா, பொ. இராமநாதர் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற ச. வி. சந்தையா, ச. வி. ஆறுமுகம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 24—8—89 வியாழக்கிழமை காலை 9-00 மணிக்கு காரைநகர் களபூமி தில்லையானத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்

விளானை,
களபூமி,
காரைநகர்:

தகவல்:
ச. வி. முருகேசு
கணவர்

(1694)

## திரு. கணபதிப்பிள்ளை வைத்தியநாதர்

திரு. கணபதிப்பிள்ளை வைத்தியநாதர் காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற பொன்னம்மாவின் கணவரும், காலஞ்சென்ற முத்துவின் மருகனும், காலஞ்சென்ற நடராசா, காலஞ்சென்ற சுப்பையா, சின்னத்துரை, இரத்தினம் ஆகியோரின் மைத்துனரும், பொன்னம்மாவின் சகோதரரும், நாகராசா, புனிதவதி, சிவநாதன் (பிரான்ஸ்), அருள்நாதன் (பிரான்ஸ்) ஆகியோரின் தகப்பனும், பொன்னம்பலம் பாலசுந்தரம் (இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம், யாழ்ப்பாணம்)தின் மாமனாரும், பிரேம்ராஜ் [சுவிஸ்], சாந்தராஜ் (கனடா), பிறேமலதா, மஞ்சுளா, தனராஜ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 34, கடற்கரைவீதி, ஈச்சமோட்டை யாழ்ப்பாணத்திலுள்ள அவரது இல்லத்திலிருந்து இன்று [23 8 89] பிற்பகல் 3-00 மணியளவில் தகனக்கிரியைக்காக தூண்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
பொ. பாலசுந்தரம்

(11746)

## திரு. மயில்வாகனம் தவராஜா

மயில்வாகனம் தவராஜா அகாலமரணம் அடைந்துவிட்டார். இவர் காலஞ்சென்ற மயில்வாகனம், திருமதி நாகரட்டினம் [அவுஸ்திரேலியா] ஆகியோரது அன்பு மகனும், மகேந்திரராஜா (பொலிஸ் திணைக்கள உத்தியோகத்தர்), தனபாலசிங்கம் அவுஸ்திரேலியா), திலகவதி, சிவசுப்பிரமணியம், சுந்தரலிங்கம் (கிராமசேவையாளர் ஈச்சமோட்டை), யோகேஸ்வரன் (அவுஸ்திரேலியா), பத்மாவதி ஆகியோரது அன்புச் சகோதரனும், ராணி, இராஜேஸ்வரி, கமலா, செல்வி, செல்வலிங்கம், அகில், நாதன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 32/1 ஈச்சமோட்டை வீதியிலுள்ள அவரது சகோதரியின் இல்லத்தில் இருந்து இன்று புதன்கிழமை காலை 10 மணிக்கு துண்டி பொது மயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்;

32/1 ஈச்சமோட்டை வீதி,
ஈச்சமோட்டை;

தகவல்
சகோதரர்கள்
சகோதரிகள்

[11747]

# மரண அறிவித்தல்கள்

## அருளானந்தம் சுதாகரன்

(காட்லிக் கல்லூரி உயர்தர வகுப்பு மாணவன்)

அல்வாய் மேற்கைச் சேர்ந்த அருளானந்தம் சுதாகரன் 21-08-1989 அன்று அகால மரணமடைந்துள்ளார்;

இவர் சந்தவலம் அருளானந்தம் (ஆசிரியர், வல்வை மகளிர் கல்லூரி), அ. தங்கேஸ்வரி அவர்களின் கனிஷ்ட புதல்வனும், அ. சாந்தினி (மட்டக்களப்பு பல்கலைக்கழகம், விஞ்ஞான பீடம்), அ. சிறீசரன், அ. சுகந்தினி (மெதடிஸ் பெண்கள் உயர்தர கல்லூரி) ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்:

அன்னாரின் ஈமக்கிரியைகள் 23-08-1989 புதன்கிழமை இன்று காலை 10-00 மணியளவில் திக்கம் மயானத்தில் நடைபெறும்; இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

தகவல்:
ஆசிரியர் க. அருளானந்தம்

அல்வாய் மேற்கு,
அல்வாய்.

(1590)

## திரு. க. குமாரதேவன்

திரு. க. குமாரதேவன் அவர்கள் 17-08-1989 அன்று U. K. இல் காலமானார்;

இவர் கைதடியைச் சேர்ந்த காலஞ்சென்ற திரு. திருமதி கந்தையாவின் அன்பு மகனும், கருணாதேவியின் அன்புக் கணவரும் செந்திலின் தகப்பனும், காலஞ்சென்ற ஆ. நாகலிங்கம் (Ret. Chief Accountant), மனோன்மணி அவர்களின் மருமகனும், Dr. சிவானந்ன், Dr. கேஸ்வரன், சச்சிதானந்தசோதி (Labour Officer, Jaffna), Dr விவேகானந்தன், மகேந்திரன் (Director Merchant Finance Co. Ltd.), பரமானந்தன், நித்தியானந்தன் (Engineer, Mitsui Cement Co. Ltd.), விபுலானந்தன் (Computer Analysist, Australia) ஆகியோரின் சகலனுமாவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் 23-08-1989 இன்று லண்டனில் நடைபெறும்: இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்;

தகவல்:
ஆ. சச்சிதானந்தசோதி

மேதர் ஒழுங்கை,
மானிப்பாய்.

(1583)

## திரு. வேலுப்பிள்ளை செல்லையா

[பரந்தன்]

சரசாலையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், பரந்தனில் வசித்தவருமான திரு. வேலுப்பிள்ளை செல்லையா அவர்கள் 19-08-1989 சனிக்கிழமை பிற்பகல் காலமாகிவிட்டார்.

இவர் கமலாவதி அம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற தங்கமுத்து, செல்லாச்சி, மாணிக்கம், திரு. வே. கந்தையா, காலஞ்சென்ற வல்லிபுரம் (ஈஸ்வரன் தியேட்டர், கிளிநொச்சி), திருமதி முத்துப்பிள்ளை, திரு. வே. சுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், மனோரஞ்சிதம்மா சுப்பையா, செல்வநாயகி நாகரத்தினம், பேராயிர உடையார், காலஞ்சென்ற சிவலோகநாதன், தனலட்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனரும், சிவச்செல்வன் (அமெரிக்கா), லீலாதேவி, வசந்தாதேவி, சாந்தாதேவி, மல்லிகாதேவி (லண்டன்), அஞ்சலாதேவி (சவுதி), ராஜினி (லண்டன்), சுகந்தினி (லண்டன்), சிவதாசன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், திருமதி சி. சர்வாங்கினி (அமெரிக்கா), ஸ்ரீபத்மநாதன் (சவுதி), ஜெயக்குமார் (அல்ஜீரியா), பொன்னம்பலம் (பரந்தன்), காலஞ்சென்ற பொன்னம்பலம் (C. E. B.), உருத்திரகுமார் (டென்மார்க்), திவ்வியகுமார் (சவுதி), Dr. சிவயோகநாதன் (லண்டன், Dr. ஸ்ரீஸ்தந்தகுமார் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், பாலமுரளி (சென். ஜோன்ஸ்), பிரசலதா (சுண்டிக்குளி மகளிர்), கிருஸ்ணி (சுண்டிக்குளி மகளிர்), கோபிநாத் (சென் ஜோன்ஸ்), கிருஸ்ணரூபன் (சென். ஜோன்ஸ்), துளசினி, ஜனகன், தர்ஜினி, பிருந்தினி, தாமரா, கீர்த்தனா, தக்ஷனா, சாருண்யா, லவன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்;

அன்னாரின் ஈமக்கிரியைகள் தபால் நிலைய வீதி, சாவகச்சேரியிலுள்ள அவரின் இல்லத்தில் 23-08-1989 புதன்கிழமை காலை 10-00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் சாவகச்சேரி பொது மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்;

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

தகவல்;
வி. ஜெயக்குமார்
(மருமகன்)

இல: 20, தபால் நிலைய வீதி,
சாவகச்சேரி;

(1577)

இப் பத்திரிகை திரு. உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்டிற்காக யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 308/3 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 23-8-1989 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org